ஓம்

# பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

மலர் 4. சென்னை, 1936ஸ்ரீ செப்டம்பர்மீ 15உ இதழ் 12.

## உ ள் ளு றை.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| 1. விசேஷாதிகாரத்துக்குப் பலியா? | 2 |
| 2. சித்திரஞ் செப்புங் கதை | 4 |
| 3. காலச் சக்கரம் | 6 |
| 4. காங்கிரஸ் பவனி (படம்) | 8 |
| 5. சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை) | 9 |
| 6. நான் கண்ட பாரதத் தாய் (பாட்டு) | 14 |
| 7. சேதுலக்ஷ்மியின் வெற்றி | 17 |
| 8. கண்ணுசாமியின் கலியாணம் | 24 |
| 9. எக்கசக்கம் | 27 |
| 10. பா—தி | 30 |
| 11. மைனர் மோகனின் காதல் | 32 |
| 12. சோதனை? | 36 |
| 13. அபிப்பிராயங்கள் | 39 |
| 14. நரியின் தந்திரம் | 42 |
| 15. மகாதேவனின் கிராம விஜயம் | 45 |
| 16. ஆடல் பாடல் | 49 |

"விகடனி"ல் வரும் பெயர்க ளெல்லாம் கற்பனைப் பெயர்களே. தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

# விசேஷாதிகாரத்துக்குப் பலியா?

“என்ன விநோதம் பார்! சென்னை விநோதம் பார்!” என்று பொம்மை வேடிக்கை காட்டுபவன் சிறுவர்கள் கவனங்களை ஈர்ப்பதற்காக, தெரு தெருவாக கூவிக்கொண்டே போவதை நாம் பார்த்திருக்கிறோம். அது போல, இப்போது “என்ன விநோதம் பார்! இந்தியா சட்டசபை விநோதம் பார்! அதில் நடக்கும் கேளிக்கையைப் பார்!” என்று வாசகர்களை நோக்கிப் பாட்டு பாடலாமா என “விகட”னுக்குத் தோன்றுகிறது.

இந்தியா சட்டசபை ஆரம்பித்து சென்ற இரண்டு வார காலமாக நடந்து வருகிறது. முதல்நாளிலிருந்து இந்நாள் வரை நிகழ்ந்து வரும் சபை நடவடிக்கையைப் பார்த்தால், சிரிப்பதா? அழுவதா? என்று “விகட”னுக்குத் தெரியவில்லை.

இந்தியா சட்டசபைக் கூட்டம் ஆரம்பித்ததுமே, சர்க்காருக்கு முதல் தோல்வி ஏற்பட்டது. அதுவும், நமது சென்னை நகரப் பிரதிநிதியான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கொண்டுவந்த ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர் நியமன முறையைப் பற்றிய அவசரப் பிரேரணைமீது உண்டாயிற்று. அடுத்தபடியாக, அவரே பாதுகாப்பு வரி சபையை ரத்து செய்த தான முறையைக் கண்டிக்க வேண்டி மற்றொரு அவசரப் பிரேரணை கொண்டு வந்தார். இன்னுஞ் சில அவசரப் பிரேரணைகளும் மற்ற மெம்பர்களால் கொண்டு வரப்பட்டன. ஆனால், அவை பிறகு வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டன. கடைசியாக, ஸாபருல்லா வாக்குறுதி கூறியதின்மேல், இந்த அவசரப் பிரேரணையும் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டது.

இதனிடையே, ஸ்ரீ சத்தியமூர்த்தி, ராஜப்பிரதிநிதி மட்டும் ரேடியோவில் அரசியல் பிரசங்கஞ் செய்யலாமா? அது அவருக்கு ஏகபோக உரிமையா? என்று கேள்வி கேட்டார். சர்க்கார் மெம்பர்கள் இதற்கு சரியான காரணஞ் சொல்ல முடியாது தத்தளித்தனர். இதுபோன்ற சில கேள்விகள் சர்க்கார் மெம்பர்களைச் சங்கடத்துக்குள்ளாக்கித் திணற வைத்தன.

ஸ்ரீமான் அவிநாசிலிங்கம் செட்டியார், பிரிட்டிஷ் ஜவுளியின் இறக்குமதி வரியைச் சட்டசபையைக் கலந்து ஆலோசிக்காமலே குறைத்து விட்டது சம்பந்தமாக, சர்க்கார் நடத்தைபற்றி ஆலோசிப்பதற்காகச் சட்டசபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வந்தார். அப் பிரேரணைதான் மற்றவைகளைவிட ஒரு விபரீதமான நிலையையுண்டு பண்ணி விட்டது. இப் பிரேரணை பற்றி வாதம் நடந்தது. காங்கிரஸ் மெம்பர்கள் விவாதத்தைச் சீக்கிரம் முடித்து விட வேண்டுமென்று விரும்பினர். அதைத் தலைவருக்கும் அறிவித்தனர். ஆனால், சர்க்கார் மெம்பர்கள் இப் பிரேரணை மீதும் தங்களுக்குத் தோல்வியேற்படுமென்று தெரிந்து ஓட்டெடுக்கவொட்டாது சூழ்ச்சி செய்ய வேண்டி பேச்சை வளர்த்தலாயினர். இது எதிர்கட்சி மெம்பர்களுக்கெல்லாம் பிடிக்கவில்லை. உடனே அவர்கள் சபையை விட்டு வெளியேறினர். இச் செயல் சபைத் தலைவருக்கு வருத்தத்தைத் தந்து விட்டது. மறுநாள் தலைவர் ஒரு அறிக்கை விடுத்தார். அதன் மீது புலாபாய் தேசாய் அறிக்கை வாசித்தார். அறிக்கை மேல் அறிக்கை பறந்தது. இவ் வவசரப் பிரேரணையின் கருத்து கண்டனஞ் செய்வதாகும். அதை நேர்முகமாகக் காட்ட இடமில்லாது போகவே காங்கிரஸ்காரர்கள் வெளியேறுவது வாயிலாக அதை நிறைவேற்றி விட்டனர். கண்டனத்துக் குரியவர்களையே

இது கண்டிக்குமாதலால், இதில் வேறு விவாதத்திற்கு இடமென்ன இருக்கிறது?

இதெல்லாம் ஒருபுற மிருக்க, இந்தியா சட்டசபையில் வரும் சில அவசரப் பிரேரணைகளினால் ஏற்படும் சங்கடத்தைச் சமாளிப்பதற்காக சர்க்கார் கட்சி யங்கத்தினர்கள் ஒரு புதுவிதமான யோசனையைக் கண்டுபிடித் திருக்கின்றனர். இந்தக் காங்கிரஸ்காரர்கள் இந்தியா சட்ட சபைகளில் பிரவேசித்தாலும் பிரவேசித்தார்கள்! அவர்கள் இந்திய சர்க்காரையும், சர்க்கார் அதிகாரிகள் செய்து வரும் காரியங்களையும் லேசில் விடவில்லை. எதற்கெடுத்தாலும், காங்கிரஸ் அங்கத்தினர் எதிர்கட்சியிலிருந்து கொண்டு, சர்க்காரை கண்டித்தும், அவர்கள் செய்துவரும் காரியங்களைக் குறை கூறியும் அவசரப் பிரேரணை கொண்டு வந்துவிடுகிறார்கள். சர்க்கார் மெம்பர்களும்தான் அப்பிரேரணைகளை முறியடிக்கப் பிரமப் பிரயத்தனப்படுகின்றனர்.. ஆயினும், அவர்களது கட்சி பலமாயிருந்தால்தானே? எதிர்கட்சிக்குச் சமாதானஞ் சொல்லி அவர்களால் சமாளிக்க முடியவில்லை. எத்தனை விஷயங்களுக்கென்றுதான் அவர்கள் சமாதானங் கூறுவார்கள்? அவர்கள் மிகவுஞ் சிரமப்பட்டுக் கூறு சமாதானங்களையாவது கேட்டு எதிர் கட்சியினர் திருப்தியடைந்து விடுகிறார்களா? அதுவுங் கிடையாது. எதிர் கட்சியினர் கேள்விமேல் கேள்வி போட்டு இவர்களைத் திணறடித்து விடுகின்றனர். இவற்றின் முடிவுகளெல்லாம் சர்க்கார் கட்சிக்குத் தோல்விமேல் தோல்வியையே கொடுத்துக்கொண்டு வருகின்றன. இந்நிலைமை அவர்களுக்குச் சகிக்கக்கூடாத கஷ்டத்தையும், அவமானத்தையு மல்லவா கொடுக்கின்றன? ஆகவே, இந்நிலைமையை மாற்றிக்கொள்ள அவர்கள் முயன்றதில் ஆச்சரியமொன்றுமில்லை. தொந்தரவு செய்யும் எதையும் முளையிலேயே கிள்ளி யெறிந்து விடுவது—கருவிலேயே சிதைத்து விடுவது—நல்ல முறையென்று இவர்கள் கண்டு பிடித்தது ஒருவகையில் புத்திசாலித்தனமேயாகும். அவர்களது அதிசய மூளையில் உதித்த அதியற்புத யோசனை என்னவென்று கருதுகிறீர்கள் வாசகர்களே! எதிர் கட்சியினர் அவசரப் பிரேரணைகளைக் கொண்டு வரும்போதே, கவர்னர் ஜெனரலைக் கொண்டு அவைகளை நிராகரித்து விடுவது என்று இவர்கள் தீர்மானித்து விட்டனர். அவ்வாறே, எல்லைப்புறகாந்திக்குப் போட்டிருக்குந் தடை சம்பந்தமாகக் கொண்டுவந்த அவசரப் பிரேரணைபோன்றவைகளை இம்முறையில் தடுத்து விடவும் ஆரம்பித்து விட்டனர். மாகாணத் தேர்தல்களில் சர்க்கார் அதிகாரிகள் தலையிடுவதைக் கண்டிக்கும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பிரேரணையும் கவர்னர்ஜெனரலின் விசேஷாதிகாரத்துக்குப் பலியாய் விட்டது. சபைத் தலைவரே முதலில் எந்த பிரேரணையையும் அநுமதிப்பதா, மறுப்பதா என்று தீர்மானிக்க வேண்டுவது சம்பிரதாயம். அதற்கு முன்பே, சில குறிப்பிடப்பட்ட பிரேரணைகளுக்கு ராஜப்பிரதிநிதி விசேஷாதிகாரத்தை யுபயோகித்து நிராகரித்து விடுவதென்பது நியாய விரோதமான முறையாகும். லார்டு லின்லித்கோ இந்தியாவுக்கு வந்ததுமே ரேடியோவில் பேசியபோது, தேர்தல்களில் சர்க்கார் நடுநிலைமை வகிப்பார்களென்று வாக்குறுதி கூறினர். அதை எவ்வளவுதூரம் அநுஷ்டானத்தில் கடைப்பிடிக்கிறார் என்று இதிலிருந்து தெரிகிறதல்லவா! இவ்விதம் நிராகரிக்க ராஜப்பிரதிநிதிக்கு அதிகாரமுண்டா எனக் கேட்டு ஸ்ரீ. சத்திய மூர்த்தியும், ஸ்ரீ புலாபாய் தேசாயும் ஆட்சேபங் கிளப்பினர். தலைவர் புனராலோசனை செய்து தாம் தீர்மானிக்கு முன்பு இவ்விதம் நிராகரிக்க வைஸ்ராய்க்கு அதிகாரங் கிடையாது என்று தீர்ப்புகூறி, மீண்டும் அப்பிரேரணையைக் கொண்டுவர அநுமதித்தார். ஆனால், வைஸ்ராய் அதை மீண்டும் நிராகரித்து விட்டார்.

இந்நவீனமுறை சர்க்கார் கட்சியினரின் நெருக்கடியான நிலைமையைத் தவிர்ப்பதாக இருக்கலாம்; ஆயினும், இம்முறையை அநுஷ்டிப்பதனால் எதிர்காலத்தில் எந்த விதமான பலன் ஏற்படுமென்பதை ராஜப்பிரதிநிதி யோசித்துப்பார்க்கவேண்டுமென "மீடன்" கேட்டுக்கொள்கிறான்.

சித்திரஞ் சேப்புங் கதை.

# எது உண்மை?

மகாத்மாகாந்தி ஜன சமூகத்திலேயே மிகவும் கேவலமான நிலையிலிருந்து வரும் தாழ்த்தப்பட்ட வகுப்பாராகிய ஹரிஜனங்களை முன்னேற்ற மடையச் செய்வதற்கும், மிகவும் க்ஷீண திசையிலிருந்து வருங் கிராமங்களைப் புனருத்தாரணஞ் செய்வதற்கும் அல்லும் பகலும் உழைத்து வருவது அனைவருக்குந் தெரிந்தவிஷயம். அவர் ஹரிஜன சேவை செய்யவேண்டு மென்றும், கிராமப் புனருத்தாரண வேலை புரிய வேண்டுமென்றும் எண்ணி வாயசைத்தாரோ இல்லையோ........!




* * *

காங்கிரஸ் தொண்டர்களும், தேச பக்தர்களும், உடனே ஹரிஜன சேரிகளுக்கும், கிராமங்களுக்குஞ் சென்று, அவற்றைத் தாங்களே சுத்தஞ் செய்தும், ஹரிஜனப் பிள்ளைகளுக்கும், ஏழைப் பிள்ளைகளுக்கும் ஸ்நானஞ் செய்வித்தும், அவர்களுக்குக் கல்வி புகட்டியும்,........

* * *

வயது முதிர்ந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் ராட்டினஞ் சுற்றவும், நூல் நூற்கவும், தறி நெய்யவும் கற்றுக்கொடுத்தும், பிழைக்க வழி சொல்லிக்கொடுத்தும், அவர்கள் அரைவயிறு கஞ்சாகிலும் அன்றுடன் குடித்து வாழ்க்கையை நடத்தச் செய்தும் சேவை செய்தனர்; இன்னமும் செய்து வருகின்றனர்.



ஆனால், சிலகாலமாக ஜஸ்டின் கட்சியினர்—முக்கியமாக ஜஸ்டிஸ் கட்சி மந்திரியான திவான்பகதூர்—குமாரசாமி ரெட்டியார், தாம் போய்ப் பேசுமிடமெல்லாம் தாங்கள் தான்—அதாவது தங்கள் கட்சிதான்—தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், கிராமப்புனருத்தாரணத்துக் காகவும் முதன் முதலாக வேலை செய்ததாகவும், இன்னமும் தீவிரமாக வேலைசெய்து வருவதாகவும், காங்கிரஸோ, மகாத்மாவோ இத்தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும், கிராமப் புனருத்தாரணத்துக்கும் ஒன்றுஞ் செய்யவில்லை யெனவும் அஞ்சாது கூறித் தேர்தல்பிரசாரஞ் செய்து வருகிறார். முழுப்பூசணிக்காயைச் சோற்றோடு மறைக்கப் பார்க்குஞ் சங்கதியாக வல்லவா இருக்கிறது! அவர் பேசுங்கூட்டங்களில் செந்தலைப் புலிகள் மட்டும் பாரா கொடுத்துக்கொண்டு இல்லாமல் இருந்தால், பொது மக்களும், ஹரிஜனங்களும் மந்திரி கூற்றை மறுத்துக் கேள்வி கேட்டுக் குட்டை வெளிப்படுத்தாம லிருப்பார்களென்று நினைக்கிறீர்கள்? மகாத்மாவும், காங்கிரஸ்காரர்களும் செய்கையில் செய்து காட்டிவரும் வேலை உண்மையா? கனம் குமாரசாமி ரெட்டியார் அடுத்த பொதுத்தேர்தலில் தாமும் தமது கட்சியும் வெற்றி பெறுவதற்காக வாயளவில் பிரசாரஞ் செய்து வருவது உண்மையா? எது உண்மை?

# காலச் சக்கரம்

## சேர வாரும் ஜெகத்திரே !

திருச்சி நகரசபைத் தலைவர் தேர்தல் முடிவு இருபெருந் தலைவர்களைக் காங்கிரஸி லிருந்து இழக்கச் செய்தது. அதன் பின்னர், காங்கிரஸி லிருந்து பலகாலம் விலகி யிருந்துவந்த சில தலைவர்கள் மீண்டும் காங்கிரஸில் வந்து சேர்ந்திருக்கின்றனர். அவர்கள் தான் ஸ்ரீமான்கள் ஜார்ஜ் ஜோஸப், டாக்டர். பி. வரதராஜலு நாயுடு, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகியவர்களாவர். இவர்களில் முதலிரு பெரியார்களும், ஒத்துழையா இயக்கப் போராட்ட காலத்தில் தீவிரமாக வேலைசெய்து சிறைசென்ற வீரர்கள். காங்கிரசிலுள்ள யாரோ சிலர்மீது இவர்களுக்கேற்பட்ட அபிப்பிராயபேதங் காரணமாக, இவர்கள் இதுவரை காங்கிரஸி லிருந்து ஒதுங்கி யிருந்தார்கள். ஆனல், இவர்கள் இவ்வளவுகாலம் தனித்து வேலை செய்து வந்ததால் ஏற்பட்ட அநுபவத்தின் பயனுக, நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ உண்மையாகச் சேவை செய்ய வேண்டுமானல் காங்கிரஸ் மகாசபையி லிருந்தே செய்யமுடியும் என்ற உண்மையை யறிந்தே, திரும்பவும் காங்கிரஸில் சேர்ந்திருக்கிருர்கள். இவர்களே யன்றி, ஸ்ரீ நாடிமுத்து பிள்ளை போன்ற பிரமுகர்களும் காங்கிரஸில் சேர்ந்து வருகிருர்கள். இத்தேச பக்தர்களுக்கு "விகடன்" நல்வரவேற் பளிப்பதோடு, நாட்டு நலத்தில் விருப்பமுடைய அனைவரும் இவர்களைப் பின்பற்றிக் காங்கிரசில் சேர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிருன்.

*  *  *

## "அரசியல் வாதிகளின் தொல்லை"

நமது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஸிம்லாவில் ரேடியோ வாயிலாக "அரசியல் வாதிகளின் தொல்லை" என்பது பற்றிப் பிரசங்கஞ் செய்தாலுஞ் செய்தார். அப்பப்பா! இந்த காங்கிரஸ் விரோதிகளுக்குத்தான் என்ன வயிற்றெரிச்சல்! அவர்கள் அப்பிரசங்கத்தைப் பிச்சு பிச்சுத் தள்ளி விட்டார்கள். "என்ன! அரசியல்வாதிகளுக்குப் பணங் கொடுக்கவேண்டுமா? அதிலும் சட்டசபை யங்கத்தினர்களுக்குச் சம்பளங் கொடுக்க வேண்டுமா? யார்! இந்த சத்தியமூர்த்தியா இதைச் சொல்வது?" என்று கதறுகின்றனர். அவர்கள் எப்படியாவது கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கட்டும். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சுமார் இருபது வருஷங்களுக்கு மேல் அரசியலில் ஈடுபட்டு வருகிருர். அவர் வாலிப உற்சாகத்தில் அப்போது சேர்ந்து விட்டார். அவர் இத்தனை வருஷங்களாகத் தென்னுட்டு அரசியலில் பட்டு வரும் தொல்லைகளை அப்போதே அறிந்திருப்பாரானல், இதில் சேர்ந்தே இருக்க மாட்டார். சிவனே யென்று வக்கீல் தொழிலில் சிரத்தையோடு இறங்கி மற்றவர்களைப்போல் ஏராளமாகப் பணஞ் சேர்த்து விட்டிருப்பார். அவர் தம் அனுபவத்தில் கண்ட பல உண்மைகளை மேற்படி பிரசங்கத்தில் கூறி யிருக்கிருர். ஆகவே, அவர் கூறியுள்ள விஷயங்களைச் சாவதானமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்போது உண்மை விளங்கும். அரசியல் வாதிகளுக்கு ஒரு நிரந்தரமான வருவாயை யுண்டுபண்ணிவிட்டால் அவர்களது அறிவும் ஆற்றலும் தேசத்துக்கு நன்கு பயன்படும். தற்போது அரசியலில் மலிந்து கிடக்கும் பலவிதமான ஊழல்களும் மறைந்தொழியும். ஆகவே அறிஞர்கள் இவ் விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பார்களாக.

*  *  *

## "பித்தாபுரம் மஹாராஜாக்கி..."

சென்றவாரம் சென்னையை யடுத்த சைதாப்பேட்டையில் பீபிள்ஸ் பார்ட்டிக் கூட்ட மொன்று நடைபெற்றதாம். அதில் அக் கட்சியைத் தோற்றுவித்திருப்பவரும், தலைவருமான பித்தாபுரம் மஹாராஜா தலைமை வகித்தாராம். அச் சமயம் அக்கட்சிப் பிரமுகர்க்ள் பலர் தங்கள் கட்சிப் பிரபாவங்களைப் பற்றியும், அவை சாதிக்கப் போகுங் காரியங்களைப்பற்றியும் விஸ்தரித்துப் பேசி

னர்களாம். பாத்திமா கமலா பீவி என்னும் பெயருடைய ஒரு பெண்மணியார் எழுந்து, பித்தாபுரம் மஹாராஜா தலைவராக உள்ள ஜனக்கட்சி மிகவும் விசேஷம் வாய்ந்ததென்றும், எல்லோரும் அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்றும், மகாத்மா காந்தியை, காங்கிரஸ்காரர்கள் பின்பற்றி நடப்பதுபோல், இக் கட்சியினரும் மஹாராஜாவைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்றும் கூறினாராம். அவ்வாறு பேசிவந்த அவ்வம்மையார் காங்கிரஸ் காரர்களும் மற்றவர்களும் மகாத்மா காந்திக்கு ஜேய் போடுவதுபோல், இங்குள்ளவர்கள் பித்தாபுரம் மஹாராஜாவுக்கு ஜேய் போடவேண்டுமென்று கூறி, "பித்தாபுரம் மஹாராஜாக்கி..............." என்று கூவினாராம்.

* * *

## ஜேய்! இல்லை

ஆனால் ஒருவர் மூச்சுவிட வேண்டுமே! பிரதியொலி யாவது கேட்கவேண்டுமே! மெதுவாகக்கூட எவரும் ஜேய் போடவில்லையாம். இவ்வளவு பெரிய ஏமாற்றத்தை அந்தம்மையார் எதிர் பார்த்திருக்கவே மாட்டார்கள். பாவம்! அந்தம்மாள் முகங் கருகிப் போய் தலை குனிந்த வண்ணம் அப்படியே உட்கார்ந்து விட்டாராம். அதற்குமேல் பேச அவர்களுக்கு எப்படி மனம்வரும்? இவ்வளவு தூரம் கிளிப்பிள்ளைக்குச் சொல்லிக் கொடுப்பது போல, பித்தாபுரம் மஹாராஜாவின் பிரபாவத்தைக் கூறி ஜேய் போடக் கற்றுக் கொடுத்தும் யாரும் முழங்க முன் வரவில்லை யென்றால், அந்தம்மாள் மனம் வேதனைப்படாது இருக்க முடியுமா! அந்தக் கட்சிப் பிரசாரகர்களில் கூட ஒருவரும் முன் வரவில்லையே! இதல்லவோ ஆச்சரியம்! இச்சிறு சம்பவத்தி லிருந்தாயினும், நம் நாட்டில் காங்கிரஸுக்கும் மகாத்மாவுக்கும் உள்ள பொதுஜன செல்வாக்கு, மற்றெந்த கட்சிக்கோ, தலைவருக்கோ கிடையாது; ஏற்படவும் ஏற்படாது என்பதை பாத்திமா கமலா பீவி போன்ற மனப்பான்மை யுடையவர்கள் அறிவார்களா?

## சுயராஜ்யம் வரும் வரை ஒத்தி வைப்பதா?

சமீபத்தில் நடைபெற்ற பம்பாய் நகரசபைக்கூட்டத்தில் ஒரு விநோதமான சம்பவம் நிகழ்ந்தது. ஸ்ரீமான் எம். ஆர். மஸானி "பம்பாயின் வாழ்க்கைச் செலவை உத்தேசித்து முனிசிபல் சிப்பந்திகள் யாவரும் 30 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் கொடுக்கக் கூடாதென நிரந்தரக் கமிட்டிக்கு இச் சபை சிபார்சு செய்கிறது" என்றொரு பிரேரணை கொண்டு வந்தார். கமிஷனர் இதனால் ஏற்படும் அதிக செலவைச் சமாளிக்க முடியாதென்று எச்சரித்தார். எனினும் அங்கத்தினர் பெரும்பாலோர் ஸ்ரீ மஸானியின் பிரேரணையை நிறைவேற்றி வைத்தனர். இதற் கடுத்தபடியாக, சிப்பந்திகளுக்குச் சம்பளத்தை யுயர்த்துவதனால் ஏற்படும் அதிகப்படி செலவைச் சமாளிப்பதற்காகவே போலும், ஜனாப் பூசப் மேஹ்ராலி, "நாட்டின் வறுமை மிகுதியை யுத்தேசித்து முனிசிபல் சிப்பந்திகள் எவருக்கும் மாதம் 500 ரூபாய்க்குமேல் சம்பளம் கொடுக்கக் கூடா"தென்று ஒரு பிரேரணை கொண்டு வந்தார். உடனே ஸ்ரீ எம். என். டால்பாடே என்பார், 'சுயராஜ்யம் வரும்வரை இப் பிரேரணைபற்றிய ஆலோசனையை ஒத்தி வைக்க வேண்டு'மென்று அப் பிரேரணைக்கு ஒரு திருத்தங் கொண்டு வந்தார். அது பெரும்பாலான ஒட்டுக்களால் நிறைவேறியது. இது ஒரு வேடிக்கையல்லவா! சுயராஜ்யம் எப்போது ஏற்படுவது? அதுவரை நகரசபையில் அதிகப்படியாக ஏற்படும் செலவைச் சமாளிக்க வழிதானென்ன! இதைப் பம்பாய் நகரசபை யங்கத்தினர்கள் உணர்ந்து பார்த்திருப்பதாக மேற்குறித்த நடவடிக்கையிலிருந்து தெரியவில்லை. இனியேனும் அவர்கள் தங்கள் பொறுப்பை யுணர்ந்து நடப்பார்களா?

# காங்கிரஸ் பவனி.




அடுத்துவரும் பொதுத் தேர்தலுக்கு நிற்க, காங்கிரஸ் மகாசபை ஆயத்தமாய்விட்டது. நமது மாகாணத்திலுள்ள ஜஸ்டீஸ் கட்சி, ஜனக் கட்சி, வைதிக சநாதனக் கட்சி முதலியவைகளின் நிலை என்ன ?

"ஜீவா."

## ஏழாவது அதிகாரம்

---

### பிள்ளைப் பாசத்தால் பேதை தவிப்பு

சிவசைலம் ஒரே தாவாகத் தாவி மூர்ச்சித்து விழுந்திருக்கும் கார்த்தியாயினியை வாரியெடுத்து மார்பின்மீது சார்த்திக் கொண்டு மேல் உத்தரீயத்தால் விசிறலானான். இதற்குள் சிலர் தண்ணீர் கொண்டுவரவே, அது முகத்தில் தெளிக்கப்பட்டது. வேறு சிலர் யோசனைப்படி, சிவசைலம் ஸ்பென்ஸர் சோடாவை உள்ளுக்குப் புகட்டினான். இவ்வித சைத்தியோபசாரங்களெல்லாஞ் செய்த பிறகு, கார்த்தியாயினி மெல்ல மூர்ச்சை தெளிந் தெழலானாள். ஆயினும் அவளுக்குப் புத்திர சோகம் மட்டும் இன்னும் நீங்கவில்லை. எனவே, சிவசைலமும், மற்றவர்களும் எவ்வளவோ தேற்றியும் கார்த்தியாயினி முன் போல் உற்சாகமாயிருக்க முடியவில்லை. சிவசைலத்துக்கு இவளை ஏன் இந் நாடகத்துக்கு அழைத்து வந்தோ மென்றாய் விட்டது. இச் சம்பவத்துக் கப்புறம்—நாடகம் முடிந்து தத்தம் வீடுகளுக்குப் போகையில் கூட—சிவசைலமும், அவனது தாயும் உறவினர்களும் ஒருவரை யொருவர் சந்திக்கவேயில்லை.

* * *

ஒருநாள் பிற்பகல் மூன்று மணியிருக்கும். சிவசைலம் ஏதோ முக்கிய வேலையாக வெளியே சென்றிருந்தான். கார்த்தியாயினி மன நிம்மதியின்றி வீட்டுக் கூடத்தில் இப்படியும் அப்படியுமாக, உலவிக் கொண்டிருந்தாள். அவ்வாறு உலாவிக் கொண்டிருந்தவள் திடீரென நின்றாள். அவளுக்கு ஏதோ யோசனை யேற்பட்டது போலிருக்கிறது. உடனே தன்னறைக்குச் சென்று மேஜையைத் திறந்து காகிதங்களை யெடுத்து அவசா

அவசரமாக எழுதலானாள். சில நிமிடங்களுக்கெல்லாம் இரு கடிதங்கள் எழுதி முடித்தாள். அவைகளில் ஒன்று சிவசைலத்துக்கு; மற்றொன்று அவளது உயிர்த்தோழி நளினிக்கு. சிவசைலத்துக்கு எழுதப்பட்ட கடிதம் பின்வருமாறு:—

என் ஆருயிர்க் காதலர்க்கு,

நான் ஒரு முக்கிய காரியத்தை முன்னிட்டு அவசரமாக வெளியே செல்லுகிறேன். அது பற்றிய விவரத்தைப் பிறகு தங்களிடம் கூறுகிறேன். கூடிய சீக்கிரம் திரும்பிவந்து விடுவேன். தங்களிடம் நேரில் சொல்லி விட்டுப் போகாததற்கு மன்னிக்கவும்.

காதலுக்கு அடிமைப்பட்ட
கார்த்தியாயினி.

தோழி நளினிக்குக் கீழ்க்கண்டபடி எழுதியிருந்தாள்:—

அருமைத்தோழி நளினிக்கு,

நலம். நலத்தையுறிய விரும்புகிறேன். எஜமானர் எப்படியிருக்கிறார்? இன்னும் கோபமாகவே இருக்கிறாரா? அவர் தற்சமயம் 'ஊட்டி'யி லிருப்பா ரென்று நினைக்கிறேன், எனது அருமைக் கண்மணி அம்பிகாபதியைக் காண எனக்கு ஆசை பிடுங்கித் தின்கிறது. இதனால் நான் ஊண் உறக்கமில்லாது வாடி வருந்துகிறேன். அவர் மாளிகையில் இல்லாத சமயம் அறிந்து எனக்கு உடனே பதிலெழுது. நான் இப்போது என் தமையனார் வீட்டி லிருக்கிறேன். உன் கடிதத்தை ஒவ்வொரு விநாடியும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். உடனே பதில் எழுத மறந்து விடாதே.

அன்புள்ள
கார்த்தியாயினி.

இவ் விரு கடிதங்களையும் இரு உறைகளில் தனித் தனியாகப் போட்டு ஒட்டி மேல் விலாசம் எழுதினாள். வேலைக்காரனைக் கூப்பிட்டு, நளினிக்கு எழுதிய கடிதத்தை அவனிடங் கொடுத்து, உடனே அதை யெடுத்துக் கொண்டு போய் தபாலில் போட்டு விட்டு வரும்படி கட்டளையிட்டாள்.

சிவசைலத்துக்கு வரைந்த கடிதத்தை மேஜையின் மீதே வைத்து விட்டு, கார்த்தியாயினி அவசர அவசரமாக உடுத்திக் கொள்ளலானாள். ஏதோ தனக்கு முக்கிய மென்று தோன்றிய சில சாமான்களை யெடுத்து ஒரு சிறு கைப்பெட்டியில் வைத்துப்பூட்டினாள். அடுத்த கணம், கைப்பெட்டியையும், கடிதத்தையும் எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்து, சமையல்காரனைக் கூப்பிட்டாள். அவன் உடனே அங்கு தோன்றிப் பணிவோடு வணங்கினான். கார்த்தியாயினி அவனிடம் தன் கையிலிருந்த கடிதத்தை நீட்டியவண்ணம், "கந்தசாமி, இந்த கடிதத்தை ஐயா வந்தவுடன், அவரிடங் கொடு. நான் ஒரு அவசர காரியத்தை முன்னிட்டு வெளியே போகிறேன். சீக்கிரம் திரும்பி வந்து விடுவதாக அவரிடங் கூறு; ஜாக்கிரதை" என்று கூறிவிட்டு விரைவாக புறப்பட்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தாள்.

கார்த்தியாயினி வெளியே சென்ற ஒருமணி நேரத்துக்கெல்லாம், சிவசைலம் வீட்டுக்கு வந்தான். வரும்போதே அவன் ஆர்வத்தோடு, "கார்த்திகா! கார்த்திகா!!" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தான். பதிலில்லை. எனவே, அவன் மீண்டும் உரத்த குரலில் "கார்த்திகா! கார்த்திகா!! நான் உன்னைத் தேடி அலைவதை வேடிக்கை பார்க்க வேண்டுமென்று எங்காயினும் ஒளித்திருக்கிறாயா என்ன!—கண்ணல்ல; ஓடி வந்து விடு. என்னெதிரே வா; ராஜாத்தி" என்று கூவியவண்ணம் ஒவ்வொரு அறையாக நுழைந்து பார்த்துக்கொண்டு வந்தான். "எங்கேயும் காணோமே! ஒரு வேளை பின்புறத்திலுள்ள தோட்டத்துக்கு உலாவப்போ யிருப்பாளோ! என்னவோ! அங்கே போய்ப் பார்ப்போம்" என்று தன்னுள் கூறியவண்ணம் புறக்கடை பக்கமாகப் போனான்.

இச் சமயம், சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்த கந்தசாமி, இருந்தாற்போ லிருந்து ஏதோ சந்தடி கேட்பதை யுணர்ந்து வெளியே வந்து பார்த்

தான். சிவசைலம் புறக்கடை பக்கமாகச் செல்வதைக் கண்டதும், "எஜமான்! எஜமான்!! இந்தாங்க. அம்மா உங்களிடம் இந்த கடிதாசியைக் கொடுக்கச் சொல்லிவிட்டு எங்கேயோ வெளியே போயிருக்காங்க; சீக்கிரம் வந்துடறதாகவுஞ் சொல்லச் சொன்னுங்க" என்று கூறியவண்ணம் உள்ளே ஓடிப்போய்க் கடிதத்தை யெடுத்து வந்து கொடுத்தான்.

சிவசைலம் ஆச்சரியத்தோடு கடிதத்தை அவசரமாகப் பிரித்துப் பார்த்தான். விஷயத்தைப் படித்ததும் அவனுக்கு வியப்பு இன்னும் அதிகமாயிற்று. "என்ன அப்பேர்ப்பட்ட முக்கிய காரியம்? என்னிடங்கூட சொல்லிக்கொள்ளாது—நான் திரும்பி வரும்வரை கூட காத்திருக்காது—அவ்வளவு அவசரமாக வெளியே செல்லவேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? எங்கே சென்றிருப்பாள்? இவ்வூரில் அவளுக்குத் தெரிந்தவர்கள் இருப்பதாக அவள் என்னிடம் இதுவரை கூறியதில்லையே! அப்படியிருக்க, யாரை நாடி அவள் சென்றிருக்க முடியும்? ஆச்சரியமாக வல்லவோ இருக்கிறது! சில நாட்களாகவே இவளது புத்தி சரியான நிலையில் இல்லை. என்னமோ இவள் செய்கையிலும் பேச்சிலும் எனக்கு வர வர அலுப்பு ஏற்பட்டு வருகிறது. அவள் திரும்பி வரட்டும். அவள் என்ன சமாதானஞ் சொல்கிருள் என்று பார்ப்போம்" என்று பலவாறு யோசனை செய்தவண்ணம் தன் அறையை யடைந்தான்.

* * *

திருவனந்த புரத்தில் திவான் ஸர். பரமேஸ்வரன் பிள்ளையின் மாளிகை யெதிரே ஒரு கோச்சுவண்டி வந்து நின்றது. அதிலிருந்து கார்த்தியாயினி இறங்கினுள். வேலையாட்கள் மூலமாக, இவள் வரவை யறிந்த கமலாதேவியும், தேவகியும் ஆச்சரியமும் சந்தோஷமும் ஒருங்கே கொண்டனர். எவ்வித முன்னறிவிப்புமின்றி, திடீரென கார்த்தியாயினி வந்தது அவர்களுக்குப் பேராச்சரியத்தை யுண்டு பண்ணிவிட்டது. அவர்கள் ஆர்வத்தோடு ஓடிவந்து கார்த்தியாயினியை நகை முகத்துடன் நல்வரவேற்றனர்.

"என்ன மதனி, முன்னதாகக் கடிதங்கூட போடாமல், திடீரென வந்தீர்களே! ரயில் ஸ்டேஷனுக்குக்கூட காரையனுப்ப முடியாமல் போய்விட்டதே! உங்களுடன் பணிப்பெண் முதலியவர்கள் கூட வரவில்லைபோ லிருக்கிறதே! என்ன சமாசாரம்!" என்று சாவதானமாகவே கேள்விகளைக் கேட்டுக்கொண்டே உள்ளழைத்துச் சென்றுள்.

இதற்குள் தேவகியும் தன் தமக்கையை ஒரு விதமாகப் பார்த்த வண்ணம், "ஏன் அக்கா! முகங்கூட வாடி வதங்கியிருக்கிறது? ஒருவேளை அத்தானுடன் கோபித்துக் கொண்டு வந்து விட்டாயா என்ன! நீ வாழ்க்கைப்பட்டு இதுவரை ஒருநாளும் இவ்விதம் வந்ததை நான் பார்த்ததே இல்லையே! என்ன நேர்ந்ததென்பதை எங்களிடங் கூறக்கூடாதா?" என்று இரக்கமாகவே கேட்டாள்.

கார்த்தியாயினி அவர்களது கேள்விகளுக்கு என்னவிதமான பதில் சொல்வதென்று திகைத்தாள். ஆயினும் தன்னிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு அம் மங்கையரின் கவனத்தை வேறு வழியில் செலுத்த எண்ணி, "அதிருக்கட்டும் அண்ணி; அண்ணு எங்கே? சமஸ்தானத்துக்குப் போயிருக்கிருரா? வந்துவிடும் நேரந்தானே!" என்று கேட்டவண்ணம் தான் கொண்டுவந்த கைப்பெட்டியை அங்கிருந்த வட்ட மேஜையின்மீது வைத்தாள். கமலாதேவி கார்த்தியாயினியின் முக மாறுதல்களைக் கலக்கத்தோடு கவனித்துக் கொண்டிருந்தாளாதலால், இவள் கேட்ட கேள்விகள் அவளது காதில் சரியாக விழவில்லை. எனவே, அவளுக்குப் பதிலாக தேவகி, "இல்லையக்கா! அண்ணு ஏதோ சமஸ்தான அலுவலாக கொச்சிக்குப்போய் மூன்று நாட்களாகின்றன. அவர் அநேகமாக நாளை மறுநாள் தான் ஊருக்குத் திரும்பி வருவாரென நினைக்கிறேன். எதற்கும் நாளை அவரிட

மிருந்து கடிதம் வந்தால் தெரிந்துவிடும்" என்று பதிலளித்தாள்.

இப்பதிலைக்கேட்ட கார்த்தியாயினியின் முகம் திருப்தியைக் காட்டியது. தான் தன் கணவனிடஞ் சச்சரவிட்டுக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிச் சிவசைலத்துடன் வாழ்வதை, அவர்களாகவே அறிந்துகொண்டு கேட்டாலல்லது, தாமாகத் தன் கணவர் யாரிடமுங் கூறமாட்டார் என்பது கார்த்தியாயினிக்கு நன்கு தெரியுமாதலால், தன்னடத்தை தன் தமயனுக்குத் தெரிந்து விட்டதோ என அவள் அஞ்சவில்லை. அவ்விதம் அஞ்சியிருந்தால் அவள் திருவணந்தபுரத்துக்கே வந்திருக்கமாட்டாளல்லவா! ஆனால், தான் தனியாகத் திடீரென வந்ததைப்பற்றி தன் தமயன் எக்க சக்கமாக ஏதேனுங் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியாது விழிக்கவல்லவோ நேரும்! தன் தத்தளிப்பு அவருக்குச் சந்தேகத்தை விளைவித்து விட்டால் என்ன செய்வது என்றே மனக்கலக்க முற்றிருந்தாள். இந்நிலையில் தமயன் ஊரில்லை யென்று அறிந்ததும், அவள் பீதியொழிந்து மனத்திருப்தி கொண்டதில் ஆச்சரியமில்லை. கமலாதேவி, தேவகி என்றால், இவர்களை எப்படியாவது சமாதானஞ் சொல்லிச் சரிப்படுத்தி விடலாமென்பது இவளது எண்ணம்.

இச்சமயத்தில் ஸர். பரமேஸ்வரம் பிள்ளையினுடைய குழந்தைகள் கார்த்தியாயினியின் குரலைக் கேட்டு விட்டு "அத்தை! அத்தை!!" என்று மகிழ்ச்சியோடு கூவிக்கொண்டே ஓடிவந்து அவளது கால்களைச் சேர்த்துக்கட்டிக் கொண்டன. கார்த்தியாயினி அச்சிறுவர்களையும் சிறுமிகளையும் ஒவ்வொருவராக ஆர்வத்தோடு வாரியெடுத்து சேர்த்தணைத்து உச்சிமோந்து முத்தமிட்டு அவைகளுக் கேற்றபடி குதலைமொழி பேசிக் கொஞ்சலானாள். இவ்விதம் அவள் அக்குழந்தைகளிடம் தன் அன்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கையில் அவளை யறியாமலே அவள் கண்களினின்று நீர் வழிந்தோடியது.

கமலாதேவியும், தேவகியும், தங்கள் கேள்விகளுக்குக் கார்த்தியாயினி பதிலே சொல்லாது மழுப்பிவிட்டதைக் கண்டு, சந்தேகங் கொண்டனர். எனவே, அவர்கள் கார்த்தியாயினியின், ஒவ்வொரு செயலையுங் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் கார்த்தியாயினி குழந்தைகளோடு அளவளாவிப் பேசிக்கொண்டே கண்ணீர் விட்டதைக் கண்டு திடுக்கிட்டனர். இவள் ஏதோ மிகவும் மனம் புண்பட்டு வந்திருக்கிறாள் என்று அவர்கள் உணர்ந்தனர். ஆகவே, அவர்கள் அவளாகவே ஏதாகிலுஞ் சொன்னாலல்லது தாங்கள் எதுவுங் கேட்டு அவளைத் தொந்தரவு செய்வதில்லை யெனத் தீர்மானித்தனர்.

அண்ணன் குழந்தைகளோடு கொஞ்சுகையில் தன் அருமை மகனது ஞாபகம் வந்து கண்ணீருகுத்த கார்த்தியாயினி ஒருவிநாடி தன்னை மறந்திருந்தாள். அடுத்த கணம் தன்னெதிரில் அண்ணியும், தங்கையும் இருப்பது நினைவுக்கு வரவே, அவசரமாகக் கண்ணைத் துடைத்த வண்ணம் முகத்தில் வலுக்கட்டாயமாகச் சிரிப்பை வருவித்துக்கொண்டு, "ஆமாம், அண்ணி! நம் தேவகிக்குக் கலியாணமாகி ஒரு வருஷத்துக்கு மேலாகப் போகிறுப் போலிருக்கிறதே! ஏதாகிலும்...." என்று இழுத்த வண்ணம் தேவகியை நோக்கினாள். தேவகி நாணத்தால் தலை குனிந்து கொண்டே வேறொரு அறைக்கு ஓடினாள். கமலாதேவி புன்சிரிப்போடு ஏதோ கூற வாயெடுத்தாள். இதற்குள் தேவகி கையில் பச்சிளங் குழந்தை யொன்றைத் தாங்கிக் கொண்டுவந்தாள். எனவே, கமலாதேவி தான் கூறவந்ததை நிறுத்திக்கொண்டாள். கார்த்தியாயினி தன் தங்கையின் குழந்தையை மகிழ்ச்சியோடு வாங்கிக்கொண்டு கண்ணாரக் கண்டு களித்து முகத்தோடு முகஞ் சேர்த்தணைத்துக் கொண்டாள்.

இங்ஙனம், அன்றெல்லாம் குழந்தைகளோடு கொஞ்சிக் கொண்டும், அண்ணி தங்கை ஆகியவர்களோடு பொதுவிஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டும் அவள் காலம்

போக்கலானாள். மறுநாளாயிற்று. காலை எட்டுமணியிலிருந்தே தபால்காரன் வரவை எதிர்பார்த்து துடிதுடித்துக் கொண்டிருந்தாள். தபால்காரனும் வந்தான்; ஆயினும் இவள் எதிர்பார்த்தபடி இவளுக்கு ஒரு கடிதமும் வரவில்லை. இதனால் அவள் மிகவும் பரபரப்படைந்தாள். இவள் இதுவரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சியும் பொறுமையும் சகிக்க முடியாத நிலையை யடைந்தது. மறு தபாலிலாயினும் தன் கடிதம் வருமென்று மிகவும் சிரமத்தோடு பொறுத்திருந்தாள். அதிலும் வரவில்லை.

எனவே, கார்த்தியாயினி பைத்தியம் பிடித்தவள் போல் கைப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு யாரிடமுஞ் சொல்லாது ஓடலானாள். உள்ளே ஏதோ வேலையாக இருந்த கமலாதேவியும், தேவகியும் வேலைக்காரர்கள் வாயிலாக விஷயமறிந்து வெளியே வந்து ஏக காலத்தில், "மதனி!! மதனி!! அக்கா! அக்கா!! எங்கே போகிறாய்?" என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்தனர். கார்த்தியாயினி அவர்களைத் திரும்பிப் பாராமலே, "இதோ வருகிறேன்; இருங்கள்" என்று கையமர்த்திக்கொண்டே விரைந்து நடந்தாள். வேலையாட்களெல்லாம் திகைத்து நின்றனர். கமலாதேவியும், தேவகியும் ஒன்றுந் தோன்றாது கலங்கி நின்றனர். குழந்தைகள் காரணமறியாது அழுதன.

* * *

மறுநாள் காலை, தேனாம்பேட்டையிலுள்ள திவான் பகதூர் காந்திமதி நாதம் பிள்ளை பங்களாவில் கார்த்தியாயினி வேகமாக நுழைந்தாள். இவளது எதிர்பாரா வருகையைக் கண்ட வேலையாட்கள் முதல் மாளிகையிலுள்ள அனைவரும் வாயெழாது திகைத்து நின்றனர். ஆனால், அவர்கள் தலைகள் கார்த்தியாயினி முன் வணங்கின. கார்த்தியாயினி யாரையும் இலட்சியஞ் செய்யாது நேரே மாளிகையின் மேன்மாடிக்கு விரைந்து சென்றாள். அருமந்த பிள்ளையைக் காண வேண்டுமென்ற ஆர்வத்தில், தன் கணவர் இருப்பதைப்பற்றியோ, இல்லாததைப்பற்றியோ சிறிதும் இலட்சியஞ் செய்யவேயில்லை. பிறனொருவனோடு சென்று விட்ட தன்னை அவர் கண்டால் என்ன செய்வார் என்ற பயங்கூட அவள் நெஞ்சில் அச்சமயம் இல்லை. பிள்ளைப் பாசத்தின் முன் எல்லாம் பஞ்சாய்ப் பறந்தோடி விட்டன.

மேன்மாடியில் தோழி நளினி அம்பிகாபதிக்கு ஏதோ வேடிக்கை காட்டி மகிழ்ச்சி யூட்டிக் கொண்டிருந்தாள். இச்சமயத்தில் கார்த்தியாயினி அங்கு போய்ச் சேரவே, நளினி நடுங்கிப் போய்விட்டாள். கார்த்தியாயினி அம்பிகாபதி இருக்குமிடத்தில் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள். நெடுநாள் பிரிந்திருந்த தன் தாயைக் கண்டதும் அம்பிகாபதி நளினியிடமிருந்து ஒரே குதியாகக் குதித்து தாயண்டை தாவினான். அடுத்த கணம் கார்த்தியாயினி அம்பிகாபதியை இரு கைகளாலும் வாரி யெடுத்து முகத்தோடு முகம் வைத்துக் கண்ணீர் விட்டுக் கதறினாள். அம்பிகாபதியும் தன் தாயின் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தான்.

(தொடரும்.)

# நான் கண்ட பாரதத்தாய்

(டி. சீனிவாஸன்.)

பாரத அனையே, பைங்கிளி
[மொழியே,
சீர்தாய் உனையே சிந்திக்கும்
[போதே
நோலா வினிமை நெஞ்சிற்
[காணுதே
போதைச் சொலிடவாய் பிரியங்
[கொள்ளுதே!
அம்மையே எமதின் அங்கயற்
[கணியே,
செம்மையே செறிந்து சீருறு வதனம்
இம்மையே வதங்கிநல் லெழிலெலாம் ஒழிய
எம்மையே நோக்கிநீ இருப்பதென்னவோ!
செங்கையில் இரத்தஞ் சிறிட, சிலம்பணி
பங்கய மலர்மென் பாதம் நோகிட,
வெங்கருஞ் சங்கிலி மெலிக்க நின்றேங்கி
எங்களை விழித்துஅழல் எதற்கெம் மம்மையே!
(தனக்கு) எவ்வித இடுக்கணும், இடர்பல வரினும்
செவ்விய அ(ன்)னையவள் சிறிதுஞ் சோர்ந்திடாள்
அவ்வித இடுக்கணை அவள்மகன் அடையின்
விம்மியும் அழுவாள், வேண்டாள் அன்னமே:
என்பது போல எங்களின் இயம்பொணு
துன்பமே அறிந்து சோர்ந்து கண்ணீர்
பொன்றுளி எனவே போயிட விடுகிறீர்
என்பது காண்பவர்க் கெளிதில் விளங்குமே.
இத்தனை பேரிருந்தும் இயம்பொணு வலியிருந்தும்
பித்தனைப் போலபல் பிரிவுக ளாகியே
சித்தமும் கலியும் நேர்மை நோக்கிநீ
சித்தமுங் கலங்கி சிந்துறுய் கண்ணீரே!
அன்னையுஞ் சிறைப்பட அடிமை வாழ்க்கை

தன்னையு மடைந்தவித் தருணமும் டம்பமாய்
பொன்னையுந் துகிலையும் பூட்டியே களிப்போர்
தன்னையா வயிற்றில் தாங்கிப் பெற்றனை !
என்னிலை தனில்முன் யாமிருந்து வாழ்ந்தோம்,
என்னிலை தனில்நாம் இப்பொழு திருக்கிறோம்,
(என்ற) தன்னிலை உணர்ந்திடா தனயரை அடைந்ததோர்
உன்னிலை நினைந்தே உருகுறாய் மனமே !
முப்பத் தைங்கோடி முதற்றா மக்களில்
ஒப்பவே அவர்நிலை ஒருசிலரொழிய மற்றோர்
தப்பியும் நினைக்காத் தன்மை நோக்கியோ
இப்படிக் கதறி ஏங்குறாய் உளமே !
வாடிய முகமும் மாறிட, விலங்கு
சாடிய வடுக்கள் சரியாய் மாறிட
ஈடிலா உமதரும் இயல்முகப் பொலிவொடு
நாடியே உமையென்று நான்காண் பேனம்மா !

1-10-36-ந் தேதி விகடனை

# அலங்கரிப்பவை

* கடவுளின் ஆக்ஞை
—குமுமணி—ராமரத்னம்.

* லலித சேகரன்
—பெ. இராமாநுஜம்.

* என்ன தங்கையா தாசி?
—கே. ராஜகோபாலன் பி. ஏ.,

* இன்ஷியூரன்ஸ் ஏஜண்டு ஏமாற்றம்
—கே. ஸந்தானம்.

* பைத்தியம் பலவிதம்
—"சுராபி"

* ஹேமலதா
—எஸ். முத்துஸ்வாமி.

* இன்ஸ்பெக்டர் காதல்
—"முருகு."

பார்க்கத் தவறாதீர்கள்! வெளிவந்துவிட்டது.

தனக்கு நிகரில்லை என்பதில் உண்மையான
பெயரை வகித்து பொதுஜனங்கள் பார்க்கப்
பார்க்கத் திகட்டாத இவ்வருஷத்திய
வெற்றிகரமான தமிழ் பேசும் படம்.

# சத்தியசீலன்
# சத்தியசீலன்
# சத்தியசீலன்
# சத்தியசீலன்

டைரக்டர் :—
B. சம்பத்குமார்

அல்லது

## தந்தைசொல் மறவாத் தனயன்.

—நடிகமன்னர்—
M. K. தியாகராஜ பாகவதர்.

—உயர் நடிகை—
M. S. தேவசேனா.

இவர்களிருவரும் சிறப்புடன் நடித்தது.

கீழ்க்கண்ட ஜில்லாக்களுக்கு உரிமை பெற்றவர்கள்.

இராமநாதபுரம்—புதுக்கோட்டை ஸ்டேட்—கோயமுத்தூர்—நீலகிரி ஜில்லா—சிலோன்—ராஜாராம் கம்பெனி, தேவகோட்டை.

விவரங்களுக்கு-தியாகராஜ டாக்கீஸ், திருச்சினாப்பள்ளி.

# சேதுலக்ஷ்மியின் வெற்றி

(ஈவா. ஆர். டேனியல்.)

"ஜானகி, நம் செல்வி சேது எங்கே? சாப்பிடும்போதும் அவளைக் காணவில்லையே" என்று வக்கீல் வீரநாதர் தம் மனைவியை நோக்கிக் கேட்டார்.

"சேதுவா? அவள் நாம் சொன்னபடி நடந்தால் தானே? அவளுக்கு என்னமோ தலைவலியாம், மண்ணாங்கட்டியாம். ஒரே பெண்ணாச்சே என்று விட்டதால் நம்முடைய சொல்லையும் தட்டி நடக்க ஆரம்பித்து விட்டாள். முக்யமாக உங்களுடைய செல்லமே அவளைக் கெடுத்து விட்டது. என்னமோ, தன்னிஷ்டப்படியே திரிகிறாள்' என்று ஜானகி அம்மாள் படபடப்புடன் கூறினாள்.

"ஐயோ ஜானகி, நீயேன் இவ்விதம் கோபப்படுகிறாய்? அவளுக்கு அதன் மேலுள்ள பிரியத்தை ஒருவராலும் தடுக்க முடியாதே! தடுத்தாலும் அது பாபம் தான்."

"ஆமாம். அப்படிப்பட்ட இடங்களுக்குப் போகாதே என்று சொன்னால் பாபம்தான். காலம் மாறிற்றல்லவா?" என்றாள்.

அதற்கு வீரநாதர், "ஜானகி, இதென்ன இப்படி பிரமாதக் கோபப் படுகிறாய்! அவள் கூட்டங்களுக்குத் தானே போகிறாள்? அதனால் என்ன குடி முழுகிப் போய் விட்டது? காங்கிரஸ் கூட்டங்களுக்குச் செல்வதில் ஒரு குற்றமும் இல்லையே! மேலும் அங்கு வருபவர்கள் தேசாபிமானிகளானபடியால் அவளுக்கென்ன ஆபத்து நேர்ந்து விடும்? உனக்குத்தான் காங்கிரஸ் என்றால் பிடிக்கவில்லை. எல்லாரும் முட்டாள்கள் என்று நினைக்கிறாய். ஆனால் அவர்கள் தேச முன்னேற்றத்திற்குப் படும் பாடுகள்..............." என்று கூறிவரும் போதே அவர் பத்தினி குறுக்கிட்டு, "அந்த பிரசங்கங்கள் எல்லாம் எனக்கெதற்கு? நாளைக்கு ஒரு கூட்டமாம்; அதில் சேதுவும் பேசப் போறாளாம்—"

"என்ன? சேதுவா? ஆச்சரியமாயிருக்கிறதே!"

"இன்னும் கேளுங்கள் உங்கள் புத்திரி லட்சணத்தை! அவள் இன்று முழுவதும் கடைத் தெருவில் நின்று கொண்டு மறியல் செய்தாளாம். ஐயோ என்ன வெட்கக் கேடாக இருக்கிறது! இப்படிப் பட்ட பெண் என் வயிற்றிலா உதிக்க வேண்டும்?" என்று பிரலாபித்தாள்.

வீரநாதருக்கு விசனிப்பதா அல்லது சந்தோஷிப்பதா என்று தெரியவில்லை. அவர் அங்கிருந்து தம் மகளுடைய அறைக்குச் சென்றார். கதவு தாளிடப் பட்டிருப்பதை அறிந்து கதவைத் தட்டி "அம்மா, சேது" என்றழைத்தார்.

அவர் புத்திரி சேது (அவ்வாறே நாமும் அவளை அழைப்போம்) கதவைத் திறந்தாள். அவள் முகம் வெளுத்து

இருந்தது. அவள் தன் தந்தையைக் கண்டதும் அவரை உள்ளே அழைத்துச் சென்று ஒரு நாற்காலியில் அமரவைத்தாள். பின்வருமாறு இருவரும் சம்பாஷிக்கலானர்கள்.

வீர:—சேது. உன் உடம்பு எப்படி இருக்கிறது?

சேது:—சற்று தலைவலியாய் இருக்கிறது. அவ் வேலை பழக்கமில்லை யாதலின் வெய்யில் கொடுமையைப் பொறுக்க முடியவில்லை.

வீர:—அதை அறிந்து தான் உன் தாயார் அதிகம் கோபித்தாள்.

சேது:—ஆமாம்; என்னிடமும் சற்று கோபமாய்த் தான் பேசினள். அக் குணம் மனிதர்க்கு இயல்புதானே?

வீர:—ஆமாம். நாளை ஒரு கூட்டத்தில் பேசப் போகிறாயாமே.

சேது:—(தலைகுனிந்த வண்ணமாய்) ஆம்.

வீர:—எனக்கு மெத்த சந்தோஷம். இன்னும் என்ன செய்ய யோசித்திருக்கிறாய்?

சேது:—கோபிக்க மாட்டீர்களே?

வீர:—இல்லை.

சேது:—நானும் அம்புஜமுமாகச் சேர்ந்து,—அதிருக்கட்டும். ஹரிஜனங்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

வீர:—என்னுடையதா?— அவர்களுக்காகப் பரிதபிக்கிறேன். மற்றவை உனக்குத் தெரியாதா?

சேது:—தெரியும். நான் ஹரிஜன சேவையில் ஈடுபட்டிருக்கிறேன். அதற்காக எனக்குக் கொஞ்சம் பொருள் வேண்டும்.

வீர:—தாராளமாய்க் கேள். உனக்குக் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன்.

சேது:—பத்து ரூபாய்கள் வேண்டும். முடிந்தால்—இஷ்ட மிருந்தால்—"

வீர:—என்ன அப்படித் தயங்குகிறாய்? இப்போதே பெற்று கொள்" என்று ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினர். "எதற்கம்மா?"

சேது:-ஹரிஜனங்கட்காகவே இதை செலவழிக்கப் போகிறேன்.

வீர:—மெத்த சந்தோஷம் அம்மா! நான் போய் வருகிறேன்.

சேது:—"அப்படியே" என, வீரநாதரும் தன் அறை போந்தார்.

தற்சமயம் வக்கீல் வீரநாதர் வெளியில் சென்றிருந்தார். அவர் வீட்டின் முன் ஒரு வண்டி நின்றது. அதிலிருந்து ஆடம்பரத்தோடு உடை அணிந்துள்ள ஒரு வாலிபன் இறங்கி வீரநாதர் வீட்டை அணுகி, கதவைத் தட்டினன். ஜானகி அம்மாள் வந்து திறந்து, ஆச்சரியத்தோடு "என்ன? கிட்டுவா?" என்று கூறிக் கொண்டே அவனுடைய க்ஷேமலாபங்களை அறிய உள்ளே அழைத்துச் சென்றாள். கிட்டு கடைசியாக, "அத்தை, எனக்குள்ள எல்லா பரீட்சைகளிலும் தேறிவிட்டேன். அதனல் ரஜாவை இங்கு கழித்து விட்டு, மறுபடியும் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று நான் இங்கு வந்தேன். சேது எங்கே?" என்று கேட்டான். ஜானகி அம்மாள் அவனை அங்கே விடுத்துப்போய் சேதுவிடம், "சேது, என் தமயன் மகன் கிட்டு வந்திருக்கிறான். சீக்கிரம் முன் அறைக்கு வா" என்று கூறி விட்டுப் போய் விட்டாள். கூட்டத்திற்குப் போவதற்காக புறப்பட்டுக் கொண்டிருக்கும் சேதுவுக்கு மிகவும் கோப முண்டானது. அவள் தனது நீல நிறக் கதர் புடவையை சரிப்படுத்திக் கொண்டு, சாந்தமாய் முன் அறைக்கு வந்து கிட்டுவைக் கண்டாள். அவனுடைய ஆடம்பரத்தைக் கண்டதும் அவன் மேல் வெறுப்புற்றாள்.

கிட்டு அவளிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு பிறகு தன் மாமியை நோக்கி "அத்தை, இதென்ன, சேதுவுக்கு இம் மாதிரி சாக்குத் துணி

யின் மேல் மோகம் உண்டாயிற்று !" என்றான். சேதுவுக்கு அதிகக் கோபம் உண்டாயிற்று. ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள்ளாக ஜானகி அம்மாள், "ஆமாம்; அவளுக்குப் பட்டுத் துணிகள் வேண்டாமாம். கதரைத்தான் உடுத்துவாளாம். காங்கிரஸ் பைத்தியம்" என்றாள்.

"சேது, எவ்வளவு சீக்கிரத்தில் நீ மாறி விட்டாய் !"

"நான் போய் வருகிறேன். வெளியே போக வேண்டும்" என்று அவ்விடம் விட்டு நகர்ந்தாள். கிட்டுவுக்கு அவளை விட மனமில்லை. "எங்கு இவ்வளவு அவசரமாய்ச் செல்கிறாய் !" என்று கூறும் போதே, "ஏண்டா கிட்டு, எப்போது வந்தாய்?" என்று கேட்டுக் கொண்டே வீரநாதர் உள் நுழைந்தார். சேது தன் தலையை அசைத்து விட்டு நேரே வெளியில் சென்றனள்.

வெகு நேரம் வரைக்கும் சேது அன்று வரவில்லை. அவளுக்காக அவ்வளவு நேரமும் ஆத்திரத்தோடும் வெறுப்போடும் காத்திருந்த ஜானகி அம்மாள், அவளில்லாமலே கிட்டுவையும் வீரநாதரையும் போஜனம் செய்யச் சொன்னாள். சாப்பிடும் போது பற்பல விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்த கிட்டு திடீரென்று, "என்ன மாமா, நான் கேட்பதற்கு பதில் பேசாமலே இருக்கிறீர்கள், இஷ்டமில்லாவிடில் சொல்லி விடுவது தானே?" என்று வினவ, ஜானகி அம்மாள், "ஆம், நீங்கள் ஏன் இப்படி ஆலசியம் செய்கிறீர்கள். கிட்டு அவளை அதிகமாய் நேசிக்கிறான். அதுவும் உறவினன். நெருங்கிய பந்துவும் முறை மாப்பிள்ளையாகவும் இருக்கிறான். இருவரும் மணப் பந்தலில் இருக்கும் நேரத்தையே நான் எதிர் பார்க்கிறேன்." என்று கூறினாள். வீரநாதரும், "எனக்கும் தடையில்லாது கொடுப்பதே நலம் என்று தோன்றுகிறது. ஆயினும் சேதுவின் சம்மதம் பெற வேண்டாமா? அதைப்பற்றி தான் யோசிக்கிறேன்" என்று சொல்லி விடவே, கிட்டு, "ஆமாம். அது முக்கியமே. நானே அவள் சம்மதத்தைப் பெற முயல்வேன்" என்று கூறினான். அது முதற் கொண்டு கிட்டு விதவிதமான உடைகளை உடுத்துவதும், அவளுடன் தனித்துப் பேச முயல்வதுமாக இருந்தான். இப்படி அவள் சம்மதத்தைப் பெறலாம் என்றிருந்தான்.

ஒருநாள் சேது தன் தோட்டத்தில் முந்தின நாள் வீசிய பலத்த காற்றினால் முறிக்கப்பட்ட ஒரு செடிக்கு, ஒரு சிறு கட்டையை வைத்துக் கொண்டு, அதை நேராக நிற்கச் செய்ய முயன்று கொண்

டிருந்தாள். அவளுக்கு பின்னால் கிட்டு பூனைபோல் வந்து, "சேது" என்றழைத்தான். சேது இதைக் கேட்டு திடுக்கிட்டுப் பார்த்தாள். கிட்டுவைக் கண்டு பிரமித்தாள். பிறகு அவ்விடம் விட்டுச் செல்ல முயன்றாள். கிட்டு அவளைத் தடுத்து,

"சேது, அவசரப்படாதே! நான் இன்னும் பதினைந்து நாட்களே இங்கு இருக்கப் போகிறேன். பிறகு நான் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமல்லவா? அப்போது என் நண்பர்கள், 'உன் மாமன் வீட்டிற்குச் சென்றாயே, என்ன விசேஷம் நடந்தது?' என்று என்னைக் கேட்டால் 'நான் காதலித்த மங்கையை மணந்தேன்'' என்று நான் கூறுவேனாயின் அது எவ்வளவு நன்றாக இருக்கும்? நீயே யோசித்துப்பார். இன்னும் நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று நான் கூறவேண்டியதேயில்லை. உன் வார்த்தைக்காகவே உன் தாய் தந்தையர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சேது, சம்மதிக்க மாட்டாயா?" என்று கேட்டான். சேது சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு, பிறகு, "உங்கள் அன்பிற்காக நான் வந்தனமளிக்கிறேன்.. அதை என்னால் திருப்பித் தர இயலாததைக் கண்டு விசனிக்கிறேன். எனக்கும் உமக்கும் உள்ள நோக்கங்கள் நேர் மாறானவை. நீங்கள் அன்னிய நாட்டு நாகரீகத்தில் மூழ்கி இருப்பவர். நானோ, நீர் கூறியபடி சாக்கு துணிகளை உடுத்துபவள். நம் மனம் ஒரு நாளும் ஒன்றுபடாது" என்று தலை குனிந்தனள். பின்னும் கிட்டு, "சேது, நான் கேட்பதற்கு மன்னிக்க வேண்டும். நீ வேறு யாரையாவது காதலிக்கின்றனையா?" என, சேது "இல்லை" என்றனள். அப்போது கிட்டு முகமலர்ந்து, "அப்படியானால் நான் உன்னை இழந்து விடவில்லை. போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு, அப்பால் சென்றனன்.

* * *

"அம்புஜா, வருகிறாயா? போய் வருவோம். நான் கேட்டபடி என் தந்தை எனக்கு பத்து ரூபாய்கள் கொடுத்துள்ளார்கள்" என்று மிக்க மகிழ்ச்சியோடு சேது கூறினள். அம்புஜம் மனவருத்தத்தோடு, "சேது, நான் அநாதையான பின்பு இப்போதுள்ள என் சம்பளம் சொற்பமே. ஆதலால் என்னால் அதிகம் கொடுத்து உதவ முடியவில்லை" என்றாள். "அம்புஜம், கவலையுறாதே. நம்மிடம் உள்ளது போதுமானது," என்று அவள் கையைப் பிடித்திழுத்து அழைத்துச் சென்றாள் சேது.

இருவருமாக, அவ்வூரின் வெளிப்பாகத்திலுள்ள சேரிக்குச் சென்றனர். அங்கு சிறிது நேரத்தில் பஞ்சமர்களால் அவர்கள் சூழப்பட்டனர். சேது அன்போடு கனிவாக, "சகோதரர்களே, உங்கள் வீடுகளில் உள்ள பெண்களுக்கு நாளை முதல் சிறு வேலைகள் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது எனது விருப்பம். இங்கு நீங்கள் ஒரு கொட்டகை இன்று போட்டு விட்டால், நாளையிலிருந்து நாங்கள் பெண்களுக்கு, நூல் நூற்பது, துணி நெய்வது, தையல் முதலியவைகளைக் கற்றுக் கொடுக்க ஆவலாய் இருக்கிறோம். ஆதலரல் தவறாது நாளைக்கு நாங்கள் வந்தவுடன் பெண்களை அனுப்ப உங்களைக் கோருகிறேன்" என்றாள். மற்ற யாவரும் மகிழ்ச்சியோடு அப்படியே செய்வதாய் ஒப்புக் கொண்டனர். உடனே அம்புஜமும் சேதுவும் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

மறுநாள் முன் கூறியபடியே, சேரிக்கு இரு பெண்மணிகளும் சென்று அங்குள்ள பெண்களுக்கு, நூல் நூற்கவும் வேண்டிய ராட்டினங்களையும் பஞ்சையும் எடுத்து நூல் நூற்கக் கற்றுத் தந்தனர். சிறுவர்க்குத் தையலும் கற்றுத் தந்தனர். இவர்கள் மிக்க உற்சாகத்தோடு இருந்தபடியால் நேரமானது இவர்களுக்குத் தெரியவில்லை. வெகு நேரம் ஆனபின் இருவரும் தத்தம் இல்லம் ஏகினர்.

சேது தன் வீட்டை அடைந்தான். வீடு தாளிடப் பட்டிருந்ததால். கதவைத் தட்டினாள். அப்போது ஒரு வேலைக்காரன் வந்து, "நீங்கள் ஆற்றிற்குப் போய் ஸ்நானம் செய்து விட்டு வந்தாலன்றி உங்களை வீட்டிற்குள் விடக் கூடாது என்று எஜமானி அம்மாள் கட்டளை யிட்டிருக்கிறார்கள்" என்றான். சேதுவுக்கு எல்லாம்

புலப்பட்டது. வேறு வழியின்றி ஆற்றை நோக்கிச் சென்றனள்.

இரவு சாப்பாடாயிற்று. ஜானகி அம்மாள், வீரநாதர், கிட்டு, சேது இவர்கள் யாவரும் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ஜானகி அம்மாள், "நமது குலம் என்ன? குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிகாம்பு போன்ற சேது, தீண்டாதாரோடு புழங்கினாளாமே! நமது ஆசாரமெல்லாம் பறந்து போயிற்றே! இந்த அநியாயத்தைப் பற்றி கேட்பாரில்லையே! என் வயிறெரியுதே!" என்று ஆரம்பித்தாள். கிட்டு எதும் அறியாதவனாய், "என்ன மாமி, என்ன சங்கதி? இப்படி புலம்புகிறீர்களே?" என்று திடுக்கிட்டுக் கேட்டான். அதற்கு வீரநாதர் "சேது, தீண்டாதாருக்கு உதவி செய்வதன் பொருட்டு அவர்களிடம் சென்றிருந்தாள்" என்று மெதுவாய்க் கூறினார். ஜானகி அம்மாள் இன்னும் கோபத்தோடு "அவள், அந்த அநாதைச் சிறுக்கி அம்புஜத்துடன் சேர்ந்துகொண்டு பறையர் நடுவில் சென்று ஏதோ வேலை கற்றுக் கொடுத்தாளாம். என்ன மானக் கேடாக இருக்கிறது! இவளைப்பெற்ற வயிற்றில் கொள்ளியைத் தான் வைக்க வேண்டும்" என்றாள்.

சேதுவோ சாந்தமாய், "அம்மா, நீ என்னை எவ்வளவு வேண்டுமானாலும் திட்டிக் கொள், அம்புஜத்தைப் பற்றி அவதூறாய்ப் பேசாதே" என்றாள்.

ஜானகி அம்மாள் வீராவேசத்துடன் "ஏது, வாய் . அதிகமாய் விட்டது! மரியாதை யல்லவா வேண்டுமாம், நீயும் அவளோடேயே இருப்பது தானே! ஏன் இங்கு இருக்கிறாய்" என்று கத்தினாள். வீரநாதர் கலக்கத்தோடு, "ஜானகி, கத்தாதே, நான் சொல்வதைக் கேள்.—" என்று சொல்லும்போதே, அவர் மனைவி குறுக்கிட்டு "அவள் இங்கு இருப்பதானால் நான் போய்விடுகிறேன்; அல்லது அவளைக் கண்டியுங்கள்" என, வீரநாதர் "அம்மா சேது, உனக்கு எது நலமாய்த் தெரிகிறதோ அதைச் செய்யம்மா" என்றார். ஆகவே சேது வேறு வகையின்றி, "சரி, அம்புஜாவுடன் கலந்து பேசி, எனக்குப் பதிலாய் அவள் தோழி ஒருத்தியை அனுப்புகிறேன். நற்காலம் வரும் வரையில் நான் அவ்விடங்களுக்குப் போகாதிருப்பேன்" என்று வருத்தத்தோடு கூறினாள்.

* * *

மாலை வேளை. சேது லக்ஷ்மி தோட்டத்தில் மன வருத்தத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தாள். அச்சமயம் அவளுக்குப் பின்னால் ஒரு வாலிபன் வந்து கொண்டிருந்தான். அவன் கதராடை அணிந்திருந்

தான். அவன் முகம் பிரகாசித்த போதிலும் சிறிது ஐயம் குடிகொண்டிருந்தது. அவன் அருகில் வந்ததும், "சேது" என்றழைத்தான். அவனைக்கண்ட சேது லக்ஷ்மி ஆச்சரியத்தோடு, "ஆ, தாங்களா? ஆனால் இதென்ன கோலம்!" என்றாள்.

"சேது, கல்லை உருக்கும் உன் உருக்கம் என் மனதையா உருக்காமலிருக்கும்?"

"என்ன, நீங்கள் சொல்வது புரியவில்லையே?"

"உன் தேசாபிமானம், என்னை வெட்கச் செய்தது"

"உண்மையாகவா? கனவுதானோ? அல்லது என் மனதைக் கவருதற்காக செய்யுஞ் சூழ்ச்சியோ?"

"சேது, அப்படி நினைக்காதே; நான் காங்கிரஸில் சேர்ந்துவிட்டேன்"

"கையொப்பம்—?"

"ஆம்"

"உறுதியாய் நிலைப்பீர்களோ?

"ஆம், உண்மையாய்-சத்தியமாய்-பிரமாணமாய்ச் சொல்கிறேன். சேது இனியேனும் என்னை அங்கீகரிக்காயோ" என்று வாலிபன் கெஞ்சினான். சேது ஏறெடுத்து புன்னகை புரிந்தாள். மறுநிமிடம் கிட்டு அவளை வாரி எடுத்தான்.

* * *

சேது லக்ஷ்மி கிட்டுவின் மனைவியாகி சின்னாட்களே ஆயின. இருவரும் மனமொத்த தம்பதிகளாய் ஒரு சிறு வீட்டில் வசித்து வருகிறார்கள். கிட்டு, தனது உத்தியோகத்தை ஊக்கத்தோடு செய்கிறாள். சேது, தவறாது சேரிக்குச் செல்கிறான். ஒரு சிறு பள்ளிக்கூடமும் திறக்கப்பட்டாயிற்று. இருவரையும் புகழாதவர் அவ்வூரில் இல்லை. அம்புஜம் அவளுடைய இணையற்ற துணைவியாகவே இருக்கிறாள்.

ஒருநாள் கிட்டு, "சேது உன் வெற்றி பூரணமான தல்லவா?" என்றான். சேதுலக்ஷ்மி புன்னகையோடு, "அம்மா நம்முடன் சேர்ந்தது ஆச்சரியமே ஆம், உண்மையாகவே, இது பூரணவெற்றி" என்றாள்.



பிரயாணி:—"ஐயா வண்டியை ஏன் இவ்வளவு வேகமாக ஓட்டுகிறீர்."

டிரைவர்:—"ஐயா பயப்படாதீர்; நாம் ஆஸ்பத்திரியை நெருங்குகிறோம்."

பெண்கள் சேவை
சமூகத்திற்கு அவசியமா?
அத்தியாவசியம் என்பதை
மறக்கமாட்டீர்கள்.

# எப்படிப்பட்ட சேவை?

பலதிறப்பட்ட
அம்சங்களால் உயர்ந்த

---

# "பாரத புத்திரி"

அல்லது

# அநாதைகள் சேவை.

---

என்ற அரிய தமிழ்ப்பேசும் படத்தில்
அறியலாம்.

---

தயாரிப்பவர்கள் :—

Super Pictures Syndicate,
DEVAKOTTAH.

# கண்ணுசாமியின் - - - - - கலியாணம்

(எஸ். டி. சம்பந்த முதலியார்.)

தூப்ளக்ஸ் தெரு,
கூடலூர்
15-1-34

அன்புமிக்க கோபாலகிருஷ்ணனுக்கு,

க்ஷேமம். க்ஷேமத்தைத் தெரிவிக்கவும். நான் இன்னும் நான்கு மாதத்திற்குள், என் தாசில்தார் வேலையிலிருந்து "ரிடையர்" ஆகப் போகிறேன். ஆனால், அதற்குள், எனது ஏகபுத்திரி சாரதாவிற்கு கலியாணம் செய்து விடவேண்டும். வயதும் 12 ஆகிவிட்டது. அவள் மிக அழகாக இருப்பது மல்லாமல், புத்திசாலியாகவும் இருக்கிறாள்.

இப்பொழுது, நீங்கள் "காலேஜில்" உபாத்தியாயரா யிருப்பதால், அங்கு நீங்கள் அநேக மாணாக்கர்களோடு பழகியிருக்கலாம். ஆகையினால், தற்பொழுது சாரதாவிற்கு ஏற்ற ஓர் வாலிபனை தேர்ந்தெடுத்தனுப்பினால், மிக நலமா யிருக்கும். அவன் மிக ஏழையா யிருந்தாலும் பாவாயில்லை. ஆனால் அவன் படிப்பில் மிக கெட்டிக்காரனா யிருத்தல் வேண்டும். கலியாணம் முடிந்தால், அவன் மேற்கொண்ட படிப்பிற்கு வேண்டிய செலவை, நான் பார்த்துக் கொள்கிறேன். இவ்விஷயத்தில், சற்று துரிதமா யிருந்தால் நலம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

குறிப்பு:—பதில் கடிதத்துடன் அவன் ஜாதகத்தையும் வாங்கி அனுப்பவும்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள
T. M. K. சாமி.

* * *

47, மாரியம்மன், கோயில் தெரு,
செங்கல்பட்டு.

அன்புடைய குமாரசாமிக்கு,

எனக்கு இப்பொழுது உடம்பு அசௌகரியமா யிருப்பதால், நான் "லீவ்" எடுத்துக்கொண்டு இங்கு வந்து ஒரு வாரமாகிறது. ஆனால் "காலேஜ்" மூலமாக தங்கள் "லெட்டர்" கிடைத்து விஷயம் தெரியலானேன். நான் அதிசீக்கிரத்தில் கலியாணத்தை முடிக்க முயற்சி செய்கிறேன்.

கண்ணுசாமி என்பவன் என் ஞாபகத்திலிருக்கிறான். அவன் மிகவும் கெட்டிக்காரன். தற்பொழுது அவன் Junior B. A. Class ல் வாசித்து வருகிறான். இன்னும் நான்,—அவனைக் கண்டு பேசி அவன் ஜாதகத்தையும் வாங்கி அனுப்பும்படியாக—எனது ஆப்த நண்பரும், "காலேஜ்" உபாத்தியாயருமாகிய ஸ்ரீ. கிருஷ்ண மாச்சாரிக்கு "லெட்டர்" எழுதியிருக்கிறேன். பதில் வந்ததும், உடனே தெரிவிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள
எம். கோபால கிருஷ்ணன்.

* * *

கிங் ஜார்ஜ் காலேஜ்
சென்னை. 30-1-34,

அன்புமிக்க கோபால கிருஷ்ணனுக்கு,

தங்கள் லெட்டர் கிடைத்தது. பதில் சீக்கிரம் எழுதாததற்குக் காரணம் கண்ணுசாமி உடம்பு அசௌக்கியத்தினால் இரண்டு மூன்றுநாள் "கிளாஸி"ற்கு வாராததேயாகும். பிறகு அவன் வந்தபிறகு, நானும் கண்டுபேசி கலியாண விஷயத்தை

யும் கலந்தேன். அவனுக்கு, "கலியாணம்" இஷ்டந்தான். ஆனால், அவன் குடும்ப கஷ்டத்தைப்பற்றி பிரலாபிக்கிறான். அதாவது (ஏதோ, அப்படி) கலியாணம் முடிந்தால் மேற்கொண்ட படிப்பிற்குக் கட்டாயம் மாமனார் உதவி வேண்டுமாம். அதுவு மல்லாமல், தற்பொழுது அடமானத்திலிருக்கும், அவன் வீடு, மாமனார் செலவில்தான் மீட்கப்பட வேண்டுமாம். பொதுவில் பையன் மிகவும் நல்லவன்தான். உங்களுக்கு தெரியாதா? நிற்க, இப்பொழுது தங்கள் சரீர சௌக்கியம் எப்படி யிருக்கிறது? உடம்பை பத்திரமாக பார்த்துக் கொள்ளவும்.

குறிப்பு:—நேற்று நடந்த கிரிக்கெட் மேட்சில், கண்ணுசாமிதான் "கப்" எடுத்தான். இன்னும் அவன் ஜாதகமும் இதனுடன் வைத்திருக்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் ஆத்ம நண்பன்.
கிருஷ்ணமாச்சாரி.

* * *

ரூம். நெ. 13, சரோஜா ஹாஸ்டல்
திருவல்லிக்கேணி, 5-2-34.

அருமைமிக்க சீமா,

உன் கடிதம் கிடைக்கப்பெற்று விஷயம் தெரியலானேன். தற்பொழுது M. Order எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நீ, இக் கடிதத்தைக் கண்டதும், கட்டாயமாக என்மீது கோபிப்பாய். ஆனால் அப்படிச் செய்யாதே. ஏனென்றால் நான் இன்னும் கொஞ்சநாளில் கூடலூர் தாசில்தாருக்கு மருமகனாகப் போகிறேன். அப்பொழுது உன் கடனை வட்டியும் முதலுமாக மணி ஆர்டர்செய்து விடுகிறேன். இன்னும் நான் மாமனார் மரியாதைக்கும் நாகரிகத்திற்கும் Highclass துணியில் ஒரு "சூட்"டும், ரோல்டுகோல்டு Frame போட்ட ஒரு "ஸ்பெக்ட்"டும் வாங்க வேண்டியவனா யிருக்கிறேன். அதற்குக் குறைந்தது 20 ரூபா யாகிலும் பிடிக்கும். ஆகையால், தற்பொழுது யாதொரு தடங்கலின்றி 20 ரூபாய் M. O. மூலம் அனுப்பி வைக்கவும். தற்பொழுது உன்னிடம் இல்லாவிட்டாலும், வேறு எங்கேயாவது கடனாவது வாங்கி அனுப்பி வைக்கவும். தடங்கல் செய்யாதே. கலியாணம் ஆனதும் உடனே அனுப்பி விடுகிறேன்.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள நண்பன்
எம். கண்ணுசாமி.

* * *

கடலூர், 5-3-34.

அன்புமிக்க கோபாலகிருஷ்ணனுக்கு,

தாங்கள் அனுப்பிய கடிதமும் ஜாதகமும் வந்து சேர்ந்தது. நானும் இவ்வூர் சோதிடம் சுப்பண்ணா சாஸ்திரியைக் கொண்டு விவாகப் பொருத்தமும் பார்த்தேன். அஷ்ட லக்ஷணங்களும் பொருந்தி, எல்லா விதத்திலும் ஒத்து "நம் சாரதைக்கென்றே இவன் பிறந்தானோ" என்று ஆச்சரியத்திற் கிடமா யிருந்தது. ஆகையினால், நான் மாப்பிள்ளைக்கு "இங்கு வரும்படியாக" கடிதமும் எழுதி விட்டேன். எம்பெருமான் கிருபையால் எல்லாம் இனிதாகவே கூடி வருகிறது.

தாங்கள், இவ்வளவு நல்ல பொருத்தமுள்ள ஜாதகனைத் தேர்ந்தெடுத்தனுப்பிய சிரமத்திற்கு, நான் மிகவும் நன்றி பாராட்ட கடமைபட்டவனா யிருக்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
T. M. K. சாமி.

* * *

கிங் ஜார்ஜ் காலேஜ், சென்னை
9-3-34.

அன்புடைய குமாரசாமிக்கு,

தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்று மிக மனம் வருந்தலானேன். ஏனென்றால், நான் முதல் முதலில், அதாவது "சீமா"ன் பேரில் செங்கல்பட்டில் இரு

கும்பொழுது தெரிவித்திருந்தவன். N. கண்ணுசாமி யாகும். ஆனால், காலேஜ் உபாத்தியாயர் கிருஷ்ணமாசாரியார், தப் பெண்ணங்கொண்டு அதே வகுப்பில் வாசிக்கும்—ஆனல் படிப்பில் கெட்டிக் கார னல்லாத M. கண்ணுசாமியிடம் பேசி அவன் ஜாதகத்தை வாங்கி அனுப்பி விட்டார்.

ஆதியில் தாங்கள், படிப்பில் கெட் டிக்காரனைக் குறித்தே எழுதி யிருந்தீர்கள். அதற்கு விரோதமாக, M. கண்ணுசாமி விளையாட்டில் மிக மிகக் கெட்டிக்காரன். (அதுவும் கிரிக்கெட்டில்தான் இன்னும் சிலாக்கியம்) ஆகையினால், தற்பொழுது ஏ தோ "சாக்கு போக்கு" சொல்லி இவனைத் தள்ளிவிட்டால் நலமா யிருக்கும். பிறகு, உடனே மறு தபாலில் N. கண்ணுசாமி யின் ஜாதகத்தை வாங்கி அனுப்புகிறேன். இத்தப்பிதத்திற்கு மன்னிக்கவும்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
எம். கோபாலகிருஷ்ணன்.

* * *

தூப்ளக்ஸ் தெரு, கூடலூர்.
20-3-34.

அன்புள்ள ஐயா,

நான் இப்பொழுது, கூடலூர் தாசில் தார் மகளைக் கலியாணம் செய்துகொள் ளப் போகிறேன். கலியாணமும் சற்று சீக்கிரத்தில் நடைபெறும் முன்பு இக் கலியாண விஷயத்தில் கலந்திருந்த நான் பொதுவாக பாடங்களை நன்றாய் படிக்க வில்லை. என்னமோ இருக்கட்டும். இருந் தாலும், தங்கள் English Paper ல் மாத் திரம் என்னை எப்படியாகிலும் Pass செய்ய வைத்து விடுங்கள். மீதி, Subject-க்கு நான் பார்த்துக் கொள்கிறேன். இப் பரிசைஷயில் தேறிவிட்டால், மாப்பிள்ளை யாகிய எனக்கு அப்புறம் என்ன வார் மதிப்பு! தயவுசெய்து கவனித்துக்கொள்ள வும்.

இப்படிக்கு
தங்கள் கீழ்ப்படிதலுள்ள
M. கண்ணுசாமி.

* * *

74, தூப்ளக்ஸ் தெரு, கூடலூர்.
20-3-34.

அன்புடைய கோபாலகிருஷ்ணனுக்கு,

தங்கள் கடிதம் வந்து சேர்ந்தது. மிகவும் வந்தனம். ஆனால் அதில் தாங் கள் மன்னிக்கணும் "இன்னிக்கணும்" என்று "பெரிய" வார்த்தைகளை யெல்லாம் கொட்டி கொட்டி யெழுதி யிருந்தீர். (அதைப் பார்க்க, எனக்கு மிக வருத்தம்) உங்கள் கிருஷ்ணமாசாரி மாப்பிள்ளையை தேர்ந்தெடுத்தது என்னதான் தப்பிதமா யிருந்தாலும், ஜாதகம் என்னமோ மிகப் பொருத்தமா யிருக்கிறது. தேவலே, மாப் பிள்ளையும் நன்றாகத்தா னிருக்கிறான். சாரதாவிற்கும் பிடித்தம்தான். தற் பொழுது சாரதாவிற்கு 12-க்குமேல் ஆகி விட்டதால், கலியாணம் நிறுத்த முடி யாது. கலியாணமும் ஏப்ரல் முதல் தேதி குறிப்பிட்டிருக்கிறது. அன்று தாங்கள் தங்கள், பந்து மித்திரர்களோடு வந்திருந்து, தம்பதிகளை ஆசிர்வதிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். தாங்கள், மாப்பிள்ளையைப்பற்றி-என்னதான் அவன் படிப்பில் கெட்டிக்காரனு யில்லாவிட்டா லும்—கவலைப்பட வேண்டாம். சாரதா வின் தலையில் என்ன எழுதி யிருக் கிறதோ அதைப்போலவே தான் நடக்கும். விதியை வெல்ல எவாலாகும்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
T. M. K. சாமி.



# எக்கசக்கம்

—:(o):—

('செங்கதிர்.')

"இந்தாடா முத்து! நீ எவ்வளவு தான் படிச்சிருந்தாலும் நம்ம, அப்பாவைக் காட்டிலும் ஒனக்கு அநுபவம் போருது. இதெல்லாம் நன்னு யோஜித்துச் செய்யவேண்டிய காரியமாக்கும். தத்துப்பித் துன்னு ஒனக்கு தோன்றத்தே பெழுதி ஏண்டா. இப்படி கெட்டுப்போரே. நன்னாக்கடந்து துண்ட மாட்டமா அலயரே. பேஷ் அன்னந்தண்ணி இல்லாமெ, ஓடாப் போயட்டியே." என்று சொல்லித் தன் தமயன் முத்து கிருஷ்ணனைக் கடிந்து கொண்டாள் ரத்தினம்.

முத்துவின் செவிகளில் ரத்தினம் கூறிய நன்மொழிகளில் எள்ளளவும் விழவில்லை. எழுதிக்கொண்டிருந்த கடிதத்தை முடித்துக்கொண்டு அவற்றை ஓர் அறையில் போட்டு எடுத்துக்கொண்டான் கையில். பின் ரத்தினத்தை நோக்கி, "இந்தா, ரத்தினம், என்னுடைய கார்யத்திலே நீ தலையிடாதே. இதுதான் கடைசி வார்த்தை. என் இஷ்டப்படி நான் நடந்துதான் தீர்வேன். இதனாலே வரும் நன்மையோ தீமையோ எப்படீன்னு எனக்குத்தெரியும். நான் படிச்சவன். என்னைக் கட்டுப்படுத்த உன்னாலேயும் உங்கள் பாட்டனாலேயும் முடியாது. அப்பா, கர்நாடகம் உலக ஞானம் என்னடீ அவருக்கு இருக்கு? பாழும் மடிசஞ்சி. இதுக்குப் பொறந்தேன் புள்ளையாய்; உனக்கு வாய்ச்சேன் தமயனாய்" என்று சீறி விழுந்துவிட்டு வெளிக்கிளம்பினான்.

இரத்தினம் ஒருமணி நேரத்திற்குள் அரைப்படி கண்ணீர் வடித்தாள். அவள் அழகிய வதனம், இதனால் வாடிப்போயிற்று.

இரண்டொரு தினங்களில் முத்துவைப் பற்றி, சென்னை 'வதந்தி வர்த்தமானப்

பத்திரிகை'யில் சில விஷயங்கள் வெளியாயின. அவற்றைக் குறித்துப் பலர் பாபரப்படைந்தார்கள். இச்செய்தியை, ரத்தினம் தன் தாயிடத்தும் பிதாவிடத்தும் படித்துக் காட்டினள். இரத்தினமும் அவள் தாயும் இதற்காக விம்மி விம்மி அழுதார்கள். "அது போறதடி உதவாக்கரை, போக்கிரி. இதுக்காக நீங்க ஏண்டி அழுறயள்; விதிப்படி நடந்தூட்டுப் போறது போங்கோ" என்று தன் மகளையும் மனைவியையும் தேற்றினர் முத்துவின் பிதா. இந்த சமயத்தில் முத்துவும் உள்ளேவர, மற்றவர்கள் எழுந்து தத்தம் காரியங்களைச் செய்யப் போனார்கள். நிற்க,

மறுநாள் ஒரு 'போலீஸ்' சேவகன் முத்துவைத் தேடிக்கொண்டு வந்தான். மத்யான போஜனத்தின் பின் அப்பொழுது தான் முத்து நித்திரையி லிருந்தான். இப்பொழுத் வீட்டிலுள்ள சகலராலும் வெறுக்கப்பட்ட முத்துவை, ரத்தினம், காட்டிக்கொடுத்து தன் கோபத்தைத் தீர்த்துக்கொள்ள நினைத்தது ஆச்சர்யமாகாது. போலீஸ் சேவகனை அழைத்துக் கொண்டு, முத்து தூங்குமிடஞ் சென்று, "அடே அண்ணு, நீ கெட்டகேட்டுக்கு தூக்கம் வேறேயாடா, இதோ கண்ணெ முழுச்சுப் பார்." என்றாள் இரத்தினம். திடுக்கிட்டு எழுந்த முத்து கண்முன் நிற்கும் சேவகனை நோக்கி, "என்ன விசேஷம்?" என்றான். முத்துவால் எவ்வித சால்சாப்புஞ் சொல்ல முடியவில்லை. தலை குனிந்தபடியே சேவகனுடன் புறப்பட்டான். இச்செய்தி பஞ்சிற்பட்ட தீபோல் அத்தெருவிலுள்ளவர்களுக் கெட்டியது. அடுத்தவீட்டு அழகுப்பாட்டி முதல் கோடிவீட்டு கும்பகர்ணய்யர்வரை எல்லோரும் வந்து முத்துவைப்பற்றி விசாரித்துப் போனார்கள். பாவம்! பாவம்!

போலீஸ் சேவகனோடு தெரு வழியே போவதற்குள் முத்துவின் மானமே போய்விட்ட தெனலாம். வழியிலே சந்தித்த பலருக்கும் முத்து என்ன பதில் சொல்வான். பிசு பிசுவென்று விழித்தான். எதிரில் தன் தந்தை வருவதைக் கண்டதும் முத்துவின் பாடு மிகவும் எக்கசக்கமாயிற்று. "இந்த போலீஸ் காரனுடன் ஊர்வலமாகப் போவதற்குள், இன்னம் எவ்வளவு பெயர்கள் முகத்தில் படவேண்டுமோ? அதனால் நாம் இவனை மீறிக்கொண்டு, ஒரே ஓட்டமாக ஓடி போலீஸ் ஸ்டேஷனை யடைவதுதான் மேல்" என்று எண்ணி கம்பி நீட்டினன் முத்து. "விடாதே! பிடி! பிடி!" என்று பலர் கூவித் துரத்தினர். ஒரு பெருங்கூட்டம் முத்துவைப் பிடித்துக்கொண்டது. முத்து என்ன செய்தான் என்று அப்பாழுங் கூட்டத்தினர் விசாரிக்காமலே, அவனை நையப் புடைத்தார்கள்.

முத்துவின்மீது பல பெருங் காயங்கள் உண்டாயின. சிறிது நேரத்தில் முத்து 'ஸ்டேஷனின்' காவ லறையில் தள்ளப்பட்டு பூட்டப்பட்டான். வெளியே போயிருந்த 'இன்ஸ்பெக்டர்' 'சாம்ராஜ்யமய்யர்' வந்து சேர்ந்தார். "அடேய் இரண்டாயிரம்! முத்துகிருஷ்ணனைக் கூட்டிக்கொண்டு வந்தாயா?" வென்றார் இன்ஸ்பெக்டர். 'லபக்' கென்று ஒரு வந்தன மளித்து "எஜமான், ரொம்ப போக்கிரிங்க அவன்" என்றான், ஈயாயிரமென்னும் கரும்பாயிரம். 'டேய், அதிகப்ரசங்கி' வாயை மூடு ஏண்டா, என்ன நேர்ந்தது" என்றார் இன்ஸ்பெக்டர். முதலிலிருந்து 'லாக்கப்பில்' தள்ளப்பட்டது வரை விபரமாக முத்துவைப்பற்றி கூறினன் இரண்டாயிர மென்னும் சேவகன். 'இன்ஸ்பெக்டர்' மூர்ச்சித்து விழுந்து எழுந்தார். "அட பாவி, இரண்டாயிரம்! என்ன காரியம் செய்து விட்டாய்" என்று கடிந்து கொண்டார்.

மறுவிநாடி முத்துவும் இன்ஸ்பெக்டரும் எதிரும்புதிருமாக இருநாற்காலிகளில் உட்கார்ந்திருக்கக் காணப்பட்டார்கள். இன்ஸ்பெக்டர், நேர்ந்துபோன அவதிகளுக்கும் அவமானத்திற்கும் காரணமான தம்மை மன்னித்துக் கொள்ளும்படி முத்துவைக் கேட்டுக்கொண்டார். முத்து இசைந்தான். ஒரு நொடியில், நான்கு அல்வாத் துண்டங்களும், எட்டு மெதுவடைகளும்

ஒரு கூஜாக்காப்பியும், முத்துவின் வயிற்றையும், இன்ஸ்பெக்டர் வயிற்றையும் நிரப்பின பின்னர், இன்ஸ்பெக்டர், ஓர் பத்திரிகையை (தினசரி வர்த்தமானம்) எடுத்து, "முத்து! இந்த விளம்பரம் உன்னுடைய கல்யாண விளம்பரந்தானே" என்றார். முத்து "ஆமா" மென்றான். "அப்படியானால், என்னுடைய பெண் குமுதத்தை நீ மணந்து கொள்வாயா" வென்றார். "அ....த....ற்....கெ....ன்....ன பேஷா" வென்று இழுத்தாற் போன்று சங்கோஜப்பட்டு பதில் கூறினான்.

இந்த சமயத்தில் "அடே முத்து!" என்றது ஒரு குரல். முத்து திரும்பிப் பார்த்து, 'வாருங்கோ அப்பா' வென்றான். "நோக்கு, ஒண்ணும் நோல்லியே, நான் ஜாமீன் குடுத்து அழெச்சுண்டு போகடா வந்தேன்" என்றார் முத்துவிடம் அவனது தந்தை. "அப்பா நீங்க, எனக்கு ஜாமீன் கொடுக்கறத்துக்கு பதிலா, இந்த இன்ஸ்பெக்டர் எனக்கு எதிர் ஜாமீன் கொடுக்கப்போறார்" என்றான். இன்ஸ்பெக்டர் சாம்ராஜ்ய மய்யர் சம்பந்திகளை வரவேற்றார்.

'ஓய் இன்ஸ்பெக்டர்வாள். என்ன சீர் வரிசை' யென்று முத்துவின் தந்தை இன்ஸ்பெக்டரை அலட்சியமாகக் கேட்டார். இன்ஸ்பெக்டர் தலை குனிந்தார். இவ்வாறு, பெண்ணைப் பெற்ற குற்றத்திற்காக, இன்ஸ்பெக்டர், சாம்ராஜ்ய மய்யருக்கு வரதக்ஷிணை மூலம் 1000-ரூபாய் அபாரதம் பூமியில் பிள்ளையைப் பெற்றோ மென்ற பிரிவுப்படி, தண்டனையாக விதித்தார் முத்துவின் தகப்பனார்.

சித்திரைமாதம் ஓர் நன்னாளில் சிரஞ்சீவி முத்துகிருஷ்ணனுக்கும், 'இன்ஸ்பெக்டர்' சாம்ராஜ்ய மய்யர் அவர்களுடைய புதல்வி சௌபாக்கியவதி குமுதவல்லிக்கும் கடிமணம் நடத்தப்பட்டது. கல்யாணத்தின்போது, முத்துவை முன்பு அழைத்துவந்த 'இரண்டாயிரம்' என்னும் நம்பரையுடைய கரும்பாயிரம் செய்த உதவி போற்றுதற்கரிது.

"அடி அம்மா! அன்னு படிச்சவன்னு படிச்சவந்தாண்டி, ஒரு பேப்பர்லே நாலுவரி எழுதி, ஒரு நொடிலே கல்யாணம் பண்ணுண்டானே. அப்பாவுந்தான் பொண்ணுக்காக அலஞ்சுதே. பலிச்சுதா? அப்பாவை கர்நாடகம்னுனே அன்னு அவன் வாய்க்கி சக்கரையை போடணும்" என்றாள் இரத்தினம் தன் தாயிடத்து.

"அதுக்குன்னு என்னடி பண்ணணுங்கிறே, இது என்னடி சம்பந்தம் வேண்டிருக்கு. ஒரு ஜாதகம் பார்த்தானா, கேட்டானா, என்ன ரொம்பப் பரிஞ்சு பேச வந்துட்டே" என்றாள் தாய்.

"இல்லே, எதுக்காகச் சொல்ல வந்தேன்னா, எனக்கும் ஒரு நாலுவரி எழுதி பேப்பர்லே...." என்று தன் எண்ணத்தை மெதுவாக வெளியிட்டாள் இரத்தினம். அந்தோ இரத்தினத்தின் இதயந்தானென்னே? முன்பு விளம்பரஞ்செய்ய முத்து எழுதியபோது விம்மி யழுததை நினைத்தாளா?

முன்பு முத்துவின்மீது விழுந்த அடிகளால் உண்டான பெருங் காயங்கள், நாளடைவில், அவன் குமுதத்தின்மீது கொண்ட காதற் கடலில் கரைந்து போயின.

MAHAMAHOPADHYAYA DR. U. V. S... LIBRARY ...ESANT...

# பா—தி

(க. வெ. அனந்தகிருஷ்ணையர்.)

—:(o):—

1

காலை 6-15. சூரியன் கீழ் கடலிலிருந்து வெளிக்கிளம்ப யத்தனித்துக் கொண்டிருந்தது. நான் என் மேஜையின் எதிரில் உட்கார்ந்த வண்ணம் ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தேன். (இருட்டில் அல்ல. மின்சார விளக்கின் ஒளியில்தான்). என் மாமா மெதுவாக என் அறையினுள் நுழைந்தார்.

மாமா:—"என்னடா இது! விளக்கைப் போட்டுண்ட வாக்கலேயே தூங்கறயாக்கும் இன்னாட்டு நெனெச்சேன்! காலங்காத்தாலே நன்னா வெடியாத்துக்கு மின்னாடியே வெளக்கையும் போட்டுண்டு என்னமோ எழுதராப்பலே யிருக்கே, ஆத்துக்காரிக்குக் கடுதாசியா?"

நான்:—"இல்லை, மாமா. அப்படியொன்றும் இல்லை. அவளுக்கே எழுதுவதானாலும் உங்களுக்குத் தெரியக்கூடாதா! ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறேன்."

மாமா:—"அப்படியா சமாச்சாரம்! எந்தப் பத்திரிகைக்குடா எழுதறே? எத்தனை தாண்டா எழுதியிருக்கே? என்னென்ன பேர் போட்டுடா எழுதியிருக்கே?....................." என்று சரமாரியாக– கேள்விகள் தொடுக்க ஆரம்பித்தார்.

இவருக்குப் பதில் சொல்லிக் கொண்டே வருவது மிகவும் கஷ்டம் என்று நினைத்து, ஜன்னலின்வழியாக எதிர்வீட்டு ராமுவைக் கண் சமிக்ஞைசெய்து அழைத்தேன். அவன் வரும்வரை இவரிடம் பேச்சுக் கொடுக்கா விட்டால் கோபித்துக் கொள்ளுவாரென்று பயந்து பேச ஆரம்பித்தேன்.

நான்:—"இதுவரை சுமார் 500 கட்டுரைகளுக்கு மேலாகவே எழுதி யிருப்பேன்."

மாமா:—"ஆயிரம்பேரைக் கொன்னவன் அரைவைத்தியன். நீ ஐநூறுதானே எழுதி யிருக்கே. ஆனால் நீ கால் ஆசிரியன்தான்."

நான்:—"நான் ஐநூறையும் பத்திரிகைகளுக்கு அனுப்பவில்லை."

மாமா:—"அப்படியானா நீ அரைக்கால் ஆசிரியன்தான். இருந்தாலும் எத்தனைதான் அனுப்பினே சொல்லேன்.

நான்:—"நான் அனுப்பினதே இரண்டுதான். அவை இரண்டும் வெளிவந்துவிட்டன."

மாமா:—"ஆனாக்க நீ பாதி ஆசிரியனாய்ட்டே. சபாஷ், எழுது இன்னம்."

2

ராமு:—"என்னை ஏனப்பா கூப்பிட்டாய்."

நான்:—"ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தேன். இடையில் என் மாமா வந்து ஏதேதோ கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். நீ வேறு ஏதாவது பேச்சுக் கொடுத்து அவரை வெளியில் இழுத்துக் கொண்டு போவாய் என்றுதான் உன்னை அழைத்தேன். நீயோ, அவர் தானாகவே போனபின்பு வந்துவிட்டாய்!"

ராமு:—"நீ அழைத்ததன் கருத்து இரண்டு. 1. நான் வரவேண்டும். 2. உன் மாமா போகவேண்டும். அதில் ஒரு பாதி முன்னாலேயே முடிந்துவிட்டது. மறு பாதி இப்பொழுது முடிந்துவிட்டது. உன் கருத்து முழுவதும் பாதிபாதியாக நிறை

வேறி விட்டது. இனி நீ உன் கட்டுரையை முழுதும் எழுதி முடி."

3

சிறிது நேரம் சென்றது. கையில் காப்பியுடன் என் சகோதரி பானுமதி அறையினுள் நுழைந்தாள்.

பானுமதி:—"என்னண்ணா, எழுதறே? பேப்பருக்கு ஆர்டிகிளா? (article)"

நான்:—(காப்பியை பருகிக் கொண்டே) "Article இல்லே பானு! இதுக்குப் பேரு கட்டுரை. இதை விகடனுக்காக எழுதரேன்."

பானு:—"கதை நன்னாருக்காண்ணா?"

நான்:—"அதனாலேதான் எழுதரேன்."

பானு:—"அப்பன்னா நீ இந்தக் கதையை என பேருக்குத்தான் எழுதணும்."

நான்:—"என்னடி, பானு! நான் எழுதிட்டு, உன்பேரைப் போடலாமா? அது தப்பு."

பானு:—"அதெல்லாம் முடியாது. என் பேரைத்தான் போடணம். இல்லேண்ணா நான் சாப்படவே மாட்டேன்; போ!" (அழ ஆரம்பித்தாள்)

நான்:—"அழாதே, கண்ணு. உன் பேரையே போட்டுடரேன்"

4

மறுநாள் மாலை 4-30 மணிக்குத் தபாற்காரன் எனக்கு ஒரு கடிதம் கொண்டுவந்தான்.

உ
கடவுள் துணை.
ஸ்ரீராம ஜெயம்.

கூடல்காடு.
6-8-'36

க்ஷேமம்.

அடியாள் பார்வதி அநேக நமஸ்காரம். உபய க்ஷேமம். இவ்விடத்தில் அப்பா, அம்மா, எச்சு ஆச்சா முதலிய எல்லாரும் சௌக்கியம். அங்கும் எல்லாருடைய க்ஷேமத்திற்கும் கடிதம் எழுத வேண்டியது.

மாமா சௌக்கியமாக வந்து சேர்ந்தார்கள். நீங்கள் ஏதோ கதை எழுதி அனுப்பப் போறேளாமே. அந்தக் கதை நல்லதுதானு? அப்படியானல் அதை நான் எழுதினதாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்தவார விகடனில் என் பெயரோடுவரும் கதையைக்காண ஆவலோடு இருப்பேன்.

எல்லா விபரத்துக்கும் உடன் பதிலெழுதப் பிரார்த்திக்கிறேன்.

அனேக நமஸ்காரம்
தங்கள் அடியாள்
பார்வதி.

5

என் மனதில் பல எண்ணங்கள் உதயமாயின.

1. மாமா கூறியது—நான் பாதி [ஆசிரியன்.
2. ராமு கூறியது—என் கருத்து [பாதி, பாதியாக நிறைவேறி விட்டது.
3. தங்கை கூறியது—தன் பெயர் ["பானுமதி" வரவேண்டியது.
4. மனைவி எழுதியது—தன் பெயர் ["பார்வதி" வரவேண்டியது.

நேரமோ கழிந்துவிட்டது. என் கதையோ முடிந்த பாடில்லை. முகவுரை கூட முழுதும் முடியவில்லையே; பாதி தான் முடிந்திருக்கிறது.

கடைசியில் அந்தப் பாதியையே, என் மனைவிக்கும், என் தங்கைக்கும் கோபம் வாராத "பா—தி" என்னும் பெயருடனே அனுப்பத் துணிந்தேன்.

---

# மைனர் மோகனின் காதல்

(கிபி.)

அளகாபுரி நகரில் வசிக்கும் மிஸ்டர் மோகன் ஒரு பெரிய ஷோக் பேர்வழி. அவரை எல்லோரும் 'அளகாபுரி மைனர்' என்று அழைப்பது வழக்கம். ஆனால் நமது மைனருக்கு வயது இருபத்தைந்தாகியும் விவாகமாகாமலே இருந்தது. இதற்குக் காரணம் அவர் தம் உள்ளத்திற் கொண்டிருந்த ஒரு விநோதக் கொள்கையே யாகும். அதாவது காதல் முதல் முதலாக சினிமா அல்லது நாடகக் கொட்டகையில் உண்டாக வேண்டும்; இவ்வாறு உண்டான காதல் முற்றிய பின்பு காதல ரிருவரும் மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே மைனர் மோகனின் துணிபு.

நம்து மைனர் இவ்வித எண்ணத்தைத் தம் முள்ளத்திற் கொண்டிருந்தது மாத்திரமல்ல; அவ் வெண்ணம் நிறைவேறுதற்கு வேண்டிய பிரயத்தனங்களை யெல்லாம் செய்தும் வந்தார். அவர் சினிமா அல்லது நாடகத்திற்குச் செல்லும் போதெல்லாம் டுவீட் கோட், பட்டு ஷர்ட், பட்டு வேஷ்டி, பட்டு அங்கவஸ்திரம், இரு காதுகளிலும் வைர கடுக்கன்கள், கை விரல்கள் ஐந்திலும் வைர மோதிரங்கள், மணிக்கட்டில் பள பள வென்று மின்னுகிற தங்கக் கடியாரம், பணப்பையில் குறைந்தது ஐந்நூறு ரூபாய்க்கு நோட்டுகள் ஆகிய இவை இல்லாமல் ஒருநாளும் போகவே மாட்டார். அச் சமயங்களில் அவர் கண்கள் காட்சி பார்க்க வந்திருக்கும் இளம் பெண்கள் மீதே முக்கியமாகச் செல்வது வழக்கம். இவ்விதமாக பல நாட்கள் கழிந்து கடைசியாக மைனர் மோகனின் எண்ணம் பூர்த்தியாகும் நாளும் வந்தது.

* * *

ஒரு நாள் மைனர் படக்காட்சி பார்ப்பதற்காகச் சென்றிருந்தார். அன்று நல்ல காட்சியா யிருந்தபடியால் டிக்கட் வாங்கும் இடத்தைச் சுற்றி ஏகக் கூட்டம். கூட்டத்தைப் பார்த்த மைனரின் கண்கள் அடுத்தாற்போல கூட்டத்திற் கருகில் நின்று கொண்டிருந்த ஓர் மோட்டார் வண்டிக்குள் கலங்கிய முகத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் இள நங்கை மீது சென்றன. அவளுக்கு வயது சுமார் இருபது இருக்கலாம்; காண்போர் மனத்தை மயக்கும் பேரெழில் வாய்ந்திருந்தாள். அவளது ஆபரணங்களும் ஆடையும் நவநாகரிகத்திற் கேற்றாற் போல் அமைந்திருந்தன. 'கண்டதும் காதல்' என்ற பழ

மொழியை யொட்டி அவளைக் கண்டதும் மைனருக்கு அவள் மீது அடங்காக் காதல் பிறந்து விட்டது. அவர் சற்று யூகம் வாய்ந்தவராதலால், அம் மங்கையின் கலங்கிய பார்வையினின்று அவள் டிக்கட் வாங்குவதற்கு முடியாமல் தவிக்கிறாள் என்று உறுதி செய்து கொண்டு அவளண்டை சென்று மிகவும் பணிவாக 'நீங்கள் காட்சி பார்க்க வந்தீர்களோ' என்று வினவினர். அதற்கு அவ்வழகி "ஆம்; அதற்குத்தான் வந்தேன். கூட்டம் அதிகமா யிருப்பதால் டிக்கட் வாங்கமுடியாமல் திகைக்கிறேன்' என்று தங்கமணி யொலித்தாற்போல் பதிலிறுத்தாள். அதற்கு மைனர், "ஓ இவ்வளவுதானா! இதோ நான் போய் ஒரு நொடியில் வாங்கி வருகிறேன்" என்று கூறிவிட்டு அப்பெண் ஏதோ சொல்வதற்கு வாயெடுப்பதற்கு முன், சரேலென்று பாய்ந்து சென்று அடுத்த நிமிஷம் இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகளைத் தம் கையில் ஏந்திய வண்ணம் திரும்பி வந்தார்.

* * *

படக்காட்சி ஆரம்பித்து விட்டது. மைனர் மோகனும் அவர் காதல்கொண்ட மங்கையு மிருந்த இடத்திற்கு எவரும் வாவில்லை. மைனரின் முழு எண்ணமும் தம் மருகிலிருந்த பெண்மீது சென்றதேயன்றி படக்காட்சியின்மீது செல்லவில்லை. அவளை விசாரித்ததி லிருந்து மைனர், அவள் அளகாபுரியிலுள்ள பிரபல வக்கீலான தவளகிரி நாதருடைய ஒரே செல்வக் குமாரி என்றும், இன்னும் மணமாகாதவளென்றும் அறிந்து கொண்டார். அவர் அவள்மேல் கொண்ட காதலும் ஒவ்வொரு நிமிஷமும் பெருகிக்கொண்டே போனது. படக்காட்சியில், காதலனும் காதலியும் முத்தமிடும் சம்பவம் சேர்ந்தபோது நமது மைனரும் தம்மையறியாமலே தம்மருகிலிருந்த 'தம் காதலி'யைக் கட்டி யணைத்து முத்தமிட்டார். சற்று நேரத்திற்குப் பின் தாம் செய்ததை யுணர்ந்த மைனர், "கண்ணே, கோபித்துக் கொள்ளாதே! காதலின் மிகுதியால் நான் அவ்விதம் செய்ய நேர்ந்தது" என்று கூறலும், அவரும் எதிர்பாரா வண்ணம் அம்மங்கை, "நாதா! வீணாய் வருந்தாதீர்கள். நான் உங்களை என் முழுமனதோடு நேசிக்கிறேன்" என்று விடை பகர்ந்தாள். இதைக்கேட்டதும் மைனர், உள்ளம் பூரித்து புளகாங்கித மடைந்து இன்ப சாகரத்தி லாழ்ந்தார். தாம் நீண்டகாலமாக, சினிமாக் கொட்டகைக் காதலைப்பற்றி கண்டு கொண்டிருந்த கனவுகள் கடைசியில் உண்மையாகவே முடியப்போகிறது என்று உறுதியாய் நம்பினர்.

* * *

படக்காட்சி முடிந்துவிட்டது. மைனர் தம் காதலியை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் மோட்டாரி னண்டையே தயங்கி நின்று கொண்டிருந்தார். இத்தருணத்தில் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல, அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்நங்கை "நீங்கள் ஏன் நடக்க வேண்டும். இந்த மோட்டாரில் ஏற்றிக் கொண்டு உங்களை உங்கள் வீட்டின் முன் நான் கொண்டுபோய் விடுகிறேன்" என்று குயிலும் தோற்கும்படியான குரலில் மொழிந்தாள். இதைக் கேட்ட மைனர் மிகவும் மகிழ்ச்சியடைந்து மோட்டாரில் ஏறி அவளண்டை அமர்ந்தார்.

மோட்டார் வண்டியும் சற்று தூரம் காற்றாய்ப்பறந்து சென்றபின், திடீரென்று இருள் நிறைந்திருந்த ஒருசந்தில் நுழைந்து நின்றது. அதே சமயத்தில், இத்தனை நேரம்வரை மோட்டாரின் பின்புறம் ஒளிந்திருந்த இரு முகமூடி முரடர்கள் மின்னல்போல் பாய்ந்தெழுந்து மைனரின் கைகளையும் கால்களையும் அசையாமல் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்கள். அதற்குள்ளாக, இத்தனை நேரமும் மைனரின்மீது மோகங் கொண்டதுபோல நடித்து வந்த அப்பெண், மைனரின் வாயில் திராவகம் தோய்த்த ஓர் துணிப் பந்தை திணிக்கவே அவர் கூக்குரலிடவும் சக்தியற்று உயிரற்ற பிணம்போ லானர்.

* *

பொழுது விடியும் நேரம். பறவையினங்கள் தத்தம் துயிலைவிட்டு எழுந்து

விட்டன. நமது மைனரும் மயக்கம் தெளியவே தாம் கிடந்த சாக்கடையி லின்றும் மெல்ல மெல்ல நகர்ந்து வெளியில் வரலானார். அவரது மூளை சரியானபடி வேலைசெய்ய ஆரம்பித்ததும், முன் நிகழ்ந்த சம்பவங்களின் நினைவெல்லாம் ஒவ்வொன்றாக வரத் தவக்கியது. ஆயி

னும் முதலில் அவரால் அவைகளை நம்ப முடியவில்லை; நடந்தவை யனைத்தும் கனவென்றே கருதினார். ஆனால் தமது வாயில் இன்னும் மயக்க திராவகத்தின் வாசனை வீசுவதையும், தம் உடைகளெல்லாம் சாக்கடை ஜலத்தில் நனைந்திருப்பதையும் கண்ட மைனருக்கு, நடந்தவை யனைத்தும் உண்மை என்பது உறுதியாய்ப் பட்டது.

இது மாத்திரமா? அவர் கைவிரல்களி லிருந்து, மின்னொளி வீசிக்கொண்டிருந்த மோதிரங்களும், மணிக்கட்டில் கட்டியிருந்த தங்கக் கடியாரமும், காதுகளிலிருந்த வைர கடுக்கன்களும் இருந்த விடம் தெரியாமல் எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டன. மைனரின் தலை கிறு கிறுவென்று சுழல வாரம்பித்தது. அவருடைய கைகள் அவரையும் அறியாமலே அவருடைய சட்டைப்பைக்குள் சென்றன. அங்கேயும் பணப்பைக்குப் பதிலாக ஒரு துண்டுக்கடிதமே மைனரின் விரல்களுக்குத் தட்டுப்பட்டது. அதை அவர் வெளியிலெடுத்துப் பிரித்துப் படிக்கலானார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

அளகாபுரி மைனருக்கு,

உம்முடைய மோதிரங்கள் முதலியவற்றை நீர் பறி கொடுத்த போதிலும் உம்முடைய காதல் கொள்கை சற்றேனும் பூர்த்தியானதை எண்ணி மகிழ்ச்சி யுறுவீர் என்று நம்புகிறேன். உம்மை என் வலையில் சிக்கவைக்கவே நான் வக்கீல் மகளாகக் கோலம் பூண்டேன். என் பெயர் தாசி க........என்பது. உம்மைப்போல் எத்தனையோ மைனர்கள் என் வலையில் சிக்கி யிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவாகப் பாடுபட்டும் என்னைக் கண்டு பிடிக்கக் கூடவில்லை. ஆகையால் நீரும் வீணாக அவர்களைப்போல் நடந்து கொள்ள வேண்டாம். இனிமேல் உம்முடைய விநோதக் காதல் கொள்கையை அறவே ஒழித்து விடுவீரென்று நம்புகிறேன்.

தாசி. க........

இதைப்படித்ததும் மைனரின் நிலைமை எப்படி யிருந்திருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்தறிந்து கொள்ளக்கூடும்.

தற்சமயம் எனக்கு மைனர் மோகனைப்பற்றி வேறொன்றும் நிச்சயமாய்த் தெரியாவிட்டாலும், அவர் தமது பழைய காதல் கொள்கைகளை முற்றும் ஒழித்து விட்டார் என்பதை மாத்திரம் நான் நிச்சயமாய் சொல்லக்கூடும்.

சினிமா ரசிகர்களே ! இதோ !

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும்

எம். கே. ராதா, எஸ். வி. வெங்கடராமன்
டி. என். மீனாக்ஷி ஆகியோர்

முழுத் திறமையுடன் நடித்த

உயரிய சமூகத்
தமிழ் பேசும் படம்

# சந்திரமோஹனா

அல்லது

## சமூகத் தொண்டு

நவநாகரீக காக்ஷிகளும் — —
இன்சுவை தரும் இனிய கீதங்களும்— —
பார்த்து பிரமிக்கும் பயங்கரச் செயல்களும் —
விடா நகைப்பைத் தரும் ஹாஸ்யங்களும் —
உற்சாகமூட்டும் உயரிய சம்பாஷணைகளும் —

ஒருங்கே அமையப் பெற்றது.

| | | |
|---|---|---|
| டைரக்ஷன் : ராஜா சந்திரசேகர் | சம்பாஷணை : எம். கந்தசாமி முதலியார் | கதை: கோத்தமங்கலம் S. M. சுப்பிரமணியம். |

மதுரை, திருநெல்வேலி, திருச்சினாப்பள்ளி, சேலம், கோயமுத்தூர், காரைக்குடி, ஊர்காம், புதுக்கோட்டை, திருவாரூர், திருப்பூர் முதலிய ஊர் தியேட்டர்களில் ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள் !

விவரங்களுக்கு :— தந்தி : Movietone.

மோஹன் மூவிடோன் கம்பெனி,
157, தெற்கு மாசி வீதி, மதுரை.

# சோதனை?

('குல்லா'.)

"மணப்பாராவுக்கு சார்ஜ் எவ்வளவு சார்?"

"லெவன் அணுஸ், ஸார்"

"இந்த எழு முப்பத்தஞ்சு எப்போ வருவான்?"

"இந்த ஊரில் ஏதாவது கொலை, கொள்ளை, திருட்டு முதலியன நடந்தால் வருவான்."

"நான் நீக்குச்சியைக் கேட்கலெ ஸார். உங்க எழு-முத்தஞ்சு வண்டி எப்போது வரும் என்றுதான் கேட்டேன்."

"அப்படிக் கேளுங்கோ ஸார். அது சரியா எழு அடித்து முப்பத்தஞ்சு நிமிஷமானதும் 'டாண்' என்று இங்கு வந்துடும்."

(பேர்வழி முகத்தில் அசடுதட்டியது. ஆனால் விடவில்லை.)

"நீங்களென்ன 'ரிலீவிங்' எ ஸ். எம்மா?"

"இல்லை, இல்லை, 'காயமான' ஆள் தான்."

"அடாடாடா. எங்கே ஸார் விழுந்தட்டேள். காயம் பலமோ?"

"பயப்படாதிங்கோ. என்னை ஆனை மலையிலிருந்து இந்தப் பள்ளத்தூரிலே தூக்கி எறிஞ்சிப்புட்டா. ஒரே குதியிலே வந்தட்டேன். உங்க தயவிலே வேறொண்ணு மில்லே."

"உங்களுக்கு முன்னாடி யிருந்தவர் எங்கே போய்விட்டார்?"

"காவடி பாளையத்துக்கு."

"ஏன் அவரை மாற்றிவிட்டார்கள்?"

"என் தலையெழுத்து இந்த ஊருக்கு வந்து தொலையணும் என்னு எழுதியிருக்கே."

"இந்த ஊருக்கென்ன ஸார். நல்ல தோப்பும் துறவுமா ஆரோக்கியமான காற்று. ஸ்படிகம் போன்ற குளம். அற்புதமான கிராமவாசம். மேலும் குந்தினாற் போல வேலை. காட்டானைபோல கதறி வரும் மோட்டாரின் தொந்தரவு உண்டா? "ஐயோ அப்பா" விலாஸ், "ஹாஹா மகா தேவ" பவான் போன்ற பகல் கொள்ளைக்காரர்களால் பணச்செலவு உண்டா? ஆ! அந்த எருமை......என்ன சுகமாக ஸ்நானம் செய்கிறது! நீங்களும்............"

(நீங்கள் நாவலாசிரியரா என்று கேட்கவில்லை. ஒருவேளை லார்டு லின்லித்கோ பிரபுவால் கிராமப் புனருத்தாரண பிரசாரத்திற்காக அனுப்பப்பட்ட ஏஜண்டா யிருக்கலாமோ என்ற சந்தேகமே அதற்குக் காரணம்.)

"போதும், போதும் என்னதான் பாலுஞ்சோறுமா யிருந்தாலும் கொஞ்சம் தொட்டுக்கொள்ள காரசாரமாக பதார்த்தங்களும் வேண்டாமா? ஒரு சினிமாவா, சிட்டாட்டக் கிளப்பா எளவு ஒன்றும் கிடையாது. போதாக்குறைக்கு எவ்வளவு நாள்தான் மாமனார் வீட்டுச் சாப்பாட்டை வரவழைத்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதோ, ஈசனே! சிவகாமி நேசனே!! ஞானகுருபா தேசிகனே!!!"

"அட பாவமே; இதில் உங்களுக்கு என்ன ஸார் கஷ்டம்? சாப்பாட்டை எடுத்து வண்டியில் வைத்துவிட்டால் நேரே வந்து விடுகிறது. பணமா காசா செலவு!

உங்கள் மாமனார் வீடு எந்த ஊரிலிருக்கிறது."

"மானா மதுரையில்"

"எந்தத் தெருவோ?"

"ரயில்வே ஸ்டேஷன்"

"என்ன, அப்படி யென்றால்"

"அதுதான் ஸார். ஐ. ஆர். ஆர்."

(ஆஹாஹா என்று ஒரு கோடை சிரிப்பு சிரித்தார்! அவர் முகத்தில் வெற்றிக்குறி காணப்பட்டது)

"ஓஹோ, சரிதான். அப்படியானால் நீங்கள் இன்னும் பிரம்மச்சாரிதான் போலிருக்கே?"

"தற்சமயம் அப்படித்தான்."

"தாய் தகப்பனார் இருக்காளோன்னா?"

"அந்த பாக்யம் தானில்லை."

"த்ஸொ, த்ஸொ, உடப்பிறந்தவா எத்தனைபேர்?"

"நான் ஒண்டிக் கட்டைதான்."

"அப்படிச் சொல்லாதிங்கோ ஸார். யானை ஒன்று யிருந்தாலும் ஆயிரம் வராகன் என்பதுபோல, மன்மத னாட்டமா இருக்கிற உங்களுக்கென்ன குறைச்சல்?"

"நீங்கள்தான் மெச்சிக் கொள்ளணும். சோத்துக்கே திண்டாட்டமாயிருக்கு..............."

"கலியாணம் செஞ்சிண்டாக்க சரியாய்ப் போய்விடுகிறது."

"இந்தமாதிரி காட்டிலே யிருக்கிற எனக்கு யார் பெண்கொடுக்க சம்மதிப்பா?"

"பாண்டவாள்ளாம் காட்டிலே யிருக்கிறது தெரிந்தும் திரௌபதையை பாணிக்கிரஹணம் செய்து வைக்கவில்லையா? உதாரணமா பாருங்கோ ஸார். எங்க குட்டி லக்ஷ்மிக்கு ரயில்வே ஸ்டேஷனைச் சேர்ந்த வீட்டிலே குடித்தனம் பண்ணணும்னு ரொம்ப ஆசை."

"அவளைப்போல எல்லோரும் இருப்பாளா?"

"ஏன், அவமாதிரி தினுசு பொண்ணை பார்த்து பிடிச்சி கட்டிப் போட்டா போறது."

"இதுக்காக நான் ஒரு பூப்பிரதக்ஷிணம் பண்ணியன்றோ ஆகணும்."

"தேன் இருக்கிற இடத்திலேன்னா தேனீவரும். நீங்க எதுக்காக போகணும்? என்னைப் பாருங்கோ! பெண்ணைப் பெற்றுவிட்டு, 'இஷ்டம்போல் பிரயாணம் செய்யும் டிக்கட்டை' வாங்கிண்டு இஷ்டமில்லாத இடத்தைக்கூட பார்த்து கழித்துவிட்டு வந்துட்டேன். அதுமாதிரி யாராவது..............."

"ஓகோ நீங்களென்ன வரன் தேடிக் கொண்டிருக்கேளா?"

"இதுவரை தேடிண்டு இருந்தேன். இப்போதுகூட மணப்பாறைக்கு போகலாமா என்று நினைச்சேன். அப்புறம் கையிலேயே வெண்ணை யிருக்கும்போது, கடைக்குப்போய் நெய்க்கு அலைவானேன். என்று இப்போதான் தெரிஞ்சது."

"ஏன், அதுக்குள்ளாக மாப்பிள்ளை யகப்பட்டானா?"

"ஆமாம்."

"எந்த ஊரிலோ?"

"இதே ஊரில்தான்."

"மாப்பிள்ளை யாரோ?"

"நீங்களா யிருந்தால் வரதக்ஷணை என்ன கேட்பேள்?"

"நான்தான் 'வரதக்ஷணை விரோதி' யாச்சே."

(இப்போது ஆசாமி நாக்கை சப்பை கொட்டிக் கொண்டார்.)

"தங்கமான குணம். இதுவரை எனக்கு உங்கமாதிரி பிள்ளையாண்டானே எதிர்ப்பட்டது கிடையாது. நீங்களென்ன சுமார்த்தாள் தானே?"

"ஆமாம்."

ரொம்ப சந்தோஷம். வடமாளா அல்லது பிர.........."

"பிரகச்சரணம் தான்."

"கையைக் கொடுங்கோ ஸார். இப்படி." (இருவரும் கை குலுக்குகிறார்கள்.)

"என்ன பிரகச்சரணம் ?"

"கண்ட்ர மாணிக்கத்து பிரகச்சரணம்."

"பேஷ், பேஷ். (லக்ஷ்மியைப் பார்த்து) குட்டீ, இங்கே வாடி. இவருக்கு நமஸ்காரம் பண்ணு."

[நமஸ்காரம் பண்ணுகிறாள்.]

"இவள்தான் ஸார் என்னுடைய கடைசிப்பெண். இவளுடைய அம்மாவுக்கும் எனக்கும் இவளைக் கண்டால்தான் ஸார் உயிர். அவ பாட்டுப்பாடினா, இன்றைக்கெல்லாம் கேக்கணும். தோ(ண்)டி ராகத்தை எடுத்தான்னா அப்படியே உருட்டிப்புடுவா. கறியா, கூட்டா, பதார்த்தமா, பண்டமா என்ன வேண்டுமென்றாலும் ஒரு நிமிஷ நோட்டீஸ் கொடுத்தால் போதும். காபி அவ கையினாலே போடணும், சாப்பிடணும்; அதே ஒரு தனிருசி. இன்னும் அவமட்டுக்கு நகை நட்டு எல்லாம் இருக்கு. எங்க மனசுக்கு உங்க விஷயமா எல்லாம் பொருந்திப் போச்சு. இனிமேல் உங்கள் சம்மதம்தான் தெரியணும்.....................மறந்துட்டேனே, இன்னொன்று கேட்கலியே, உங்கள் கோத்திரம் என்ன ஸார் ?"

"உபமன்யு கோத்திரம்"

"நல்லவேளை. நான் பயந்தே போனேன். எங்கே கோத்திரம் தாயாதிகளாய் விடுவோமோ என்று. எங்கள் கோத்திரம் அம்பரீஷ கோத்திரம். சூத்திரம் என்னவோ ?"

"ஆபஸ்தம்ப சூத்திரம்."

"ஆஹாஹா! எவ்வளவு பொருத்தம்' கிட்ட இருப்பதை விட்டு விட்டு ஊரெல்லாம் சுற்றித் திரிந்தேனே. ஜாதக மிருக்கிறதோ ?

"எனக்கு ஜாதகமே எழுதவில்லை. எல்லாம் மனப் பொருத்தம்தான்."

"நன்றாய்ச் சொன்னீர்கள். எனக்கும் அதுதான் பிடிக்கிறது. இந்த மாதக் கடைசியிலேயே முகூர்த்தம் வைத்து விடலாமல்லவா ?"

(போர்ட்டர் வண்டி வருவதற் கறிகுறியாக மணியடிக்கிறான்)

"பார்த்தீர்களா! ஸார். பேஷான சகுனம். லக்கனப் பத்திரிகைகூட இப்போதே எழுதி விடலாமே."

(இரும்பு மணி நல்ல சகுனமா— யோஜிக்கிறார்)

* * *

ஒரு பாஸஞ்சர் அப்பொழுதுதான் தலைவிரிகோலமாய் ஓடிவருகிறான். அவன்,

("நச், ஸார், தஞ்—நச், நச், தஞ்சாவூருக்கு நச், நச், ஒரு டிக்கட்..........நச், நச்,நச்,)

'டக்' என்று ஒரு சப்தமும், 'கிளிக்' என்று ஒரு வெட்டின சப்தமும் கேட்டது. டிக்கட் கொடுக்கப்பட்டது.

* * *

ஏன் பேர்வழி நடையைக் காட்டிவிட்டார்? ஓகோ! கடைசியாக சகுனம் குறுக்கேவந்து நின்றது போலும்! ஈசுவரா! பெண்ணைப் பெற்றவாளுக்கு இன்னும் என்னென்ன சோதனை வைத்திருக்கிறாயோ ?



# அபிப்பிராயங்கள்

—————:o:—————

(ஆர். வரதராஜன்.)

1

ஒருவர் 'புருஷனுக்குத் தெரியும் பெண்டாட்டியின் அருமை' என்று ஒரு கட்டுரையெழுதினர். ஆனல் அதைவிட அந்தக் கட்டுரைக்கு, 'பெண்டாட்டிக்குத் தெரியும் புருஷனின் அருமை' என்று பெயர் கொடுத்திருந்தால் நன்றாயிருக்கும் என்று நான் அபிப்பிராயப் பட்டேன். இதைப்பற்றி வேறொரு நண்பரிடங் கூறினேன். அதற்கு அவர் 'உலகம் பலவிதம்! ஸார்' என்று ஒரே வரியில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

2

ஒரு நண்பர் என்னிட மிருந்து ஒரு நாவலை வாங்கிக்கொண்டு போனர். பிறகு சிலநாட்களுள் அதைக்கொண்டு வந்து கொடுத்துவிட்டு, 'ஸார், இது ஒரு வாண்ட நாவல் ஸார். (Dry Novel) குதிரை மேல் ஏறுவதும் போவதும் விழுவதுமாக இருக்கிறதே ஒழிய அவ்வளவு ஒன்றும் ரஸிக்கவில்லை' என்று தன் உண்மை அபிப்பிராயத்தை வெளியிட்டார். அதே நாவலைப்படித்த மற்ெறாரு நேயரின் அபிப்பிராயத்தைக் கீழே தருகிறேன்.

'இந்நாவல் படித்தவரை சுவாரஸ்யமாய் இருக்கிறது. பழங்கால வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறது. நாவல் பூராகவும் திடுக்கிடும் அற்புதச் செயல்கள் நிறைந்து விளங்குகின்றது.'

'கதையே சுத்த மோசம், இங்கிலீஷ் நாவலை அப்படியே காப்பியடித்து எழுதியிருக்கிறான், ஸார்.' என்பது மற்றொரு நண்பரின் உயரிய அபிப்பிராயம்.

3

ஒருநாள் நானும் எனது நண்பர்களும் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது கழுதை யொன்று கத்திற்று. அதைக் கேட்ட என் நண்பர் ஒருவர் 'உமது காரியம் கண்டிப்பாய் நிறைவேறும்!' என்று தன் ஆணித்தரமான அபிப்பிராயத்தைக் கொடுத்தார்.

'ஆனல் தாமதித்துத்தான் முடியும்' என்று வேறொருவர் தமது உள்ளக்கிடக்கையைத் திறந்து விட்டார்.

அவர்களிருவரும் சென்ற பிறகு என் கூடவிருந்த மற்றொரு ஆசாமி, 'அவர்கள் கிடக்கின்றார்கள், ஸார், எனக்கு இந்த சகுனங்களி லெல்லாம் நம்பிக்கை கிடையாது. உங்களுக்கெப்படி, ஸார்?' என்று தனது அந்தரங்க அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டுவிட்டு என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். நான் மவுனமா யிருந்துவிட்டேன்.

4

எத்தாபுரம் ஜமீன்தார் கொலை சங்கதி பத்திரிகைகளில் வெளியானதும் போலீஸ் இன்ஸ்பெக்டர் பொத்தப்ப நாயுடும் துப்பறியும் சதாசிவமும் ஜமீன்தார் பங்களாவுக்கு விரைந்தோடி வந்தனர். ஜமீன்தாரின் பக்கத்தில் அவரது தம்பியின் துப்

பாக்கி கிடந்தது. குண்டு மார்பில் பாய்ந்திருந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டரும் துப்பறிபவரும் ஒவ்வொரு மூலை முடக்குகளிலும் தேடிவிட்டுக் கடைசியில் விசாரணையும் செய்துவிட்டு வெளியே வந்தனர். பிறகு அவர் சதாசிவத்தினிடம் தெரிவித்ததாவது, 'சதாசிவம், நான் ஜமீந்தாரின்




தம்பியைப் பெரிதும் சந்தேகிக்கிறேன், அவர் அவருடைய சொத்தை அடையக் கொலை செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவருடைய துப்பாக்கி அங்கு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பது என் அபிப்பிராயம்!'

ஆனால் சதாசிவத்தின் டைரியில் அன்று பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

'ஜமீன்தார் கொலையுண்ட விஷயமாக நான் அங்கு சென்று பரிசிலனை செய்த பொழுது ஒரு பீரோவின் மூலையில் U. F. என்று போடப்பட்டிருந்த ஒரு கைக்குட்டை கிடந்தது. கொலையாளி உள்ளே நுழைந்து பீரோவைத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டிருக்கும் பொழுது ஜமீன்தார் எழுந்து தனக்குப் பக்கத்தில் அகஸ்மாத்தாக இருந்த தன் தம்பி துப்பாக்கியை எடுத்துச் சுட முயன்றிருப்பாரென்றும் உடனே கொலையாளி திரும்பிச்சுட்டிருக்க வேண்டுமென்றும் அவசரத்தில் அவன் கைக்குட்டையை விட்டு விட்டுப் போயிருக்க வேண்டுமென்றும் ஊகிக்கிறேன்'

5

ராஜத்தின் கலியாணப்பேச்சு வந்தது. அவனது தகப்பனர், 'ராஜத்தை ராஜகோபாலனுக்குத் தான் கொடுக்கவேண்டும். ஒழுங்கான பையன். நல்ல ஆசாரமுடையவன்' என்று தமது தர்மபத்தினி தாராபாயிடம் கூறினர். ஆனல் அந்தம்மாளோ பாவம்! நல்ல படித்த மாப்பிள்ளைக்குத்தான் கொடுக்கவேண்டும். அவளுக்கேற்றவன் தனது தம்பியே என்று அபிப்பிராயப்பட்டாள்.

ராஜமோ தன்னுடைய தாய் தந்தையர் ஸெலெக்ட் பண்ணினதில் கொஞ்சங்கூட விருப்பமில்லை யென்றும் தான் காதலித்த சோமநாதனையே கலியாணஞ் செய்துகொள்வே னென்றும் தன் சொந்த அபிப்பிராயத்தைத் தன் சிநேகிதி பொருத்தியிடம் கூறியதாகக் கேள்வி.

6

'வாட் மிஸ்டர் வரதராஜன்! காலமே கெட்டுப் போய்விட்டது போங்க. என்ன, தாழ்ந்த சாதி உயர்ந்த சாதி என்று ஏதாவது உண்டா? எல்லாம் போச்சு. இந்த உலகத்துக்கே கேடுகாலம் வந்துவிட்டது' என்று தமது அபிப்பிராயத்தைக் கூறிக்கொண்டு உலகத்தின்மீது பச்சாதாபப்பட்டார் எதிர்த்தவீட்டு குப்பு சாஸ்திரிகள்.

'நமக்குள் ஜாதிச்சண்டை, சமூகப் பிரிவு, பொருமை முதலிய அஞ்ஞானங்கள் குடிகொண்டிருப்பதா லல்லவோ நாம் அடிமை வாழ்வு வாழ்கிறோம்' என்று என்னிடம் வேறொரு சமயத்தில் ஒரு சமூக முன்னேற்றப் பிரியர் கூறினர்.

இவற்றிற் கெல்லாம் என் மனம் 'தத்தம் மனத்தனையர்கள்' என்ற நாலடியார் பாடலே காரணம் என்று அபிப்பிராயப்பட்டது.

7

அதிருக்கட்டும். நண்பர்கள் பலர் பலவிதமாக இக்கட்டுரையைப் பற்றி அபிப்பிராயப்படக் கூடும். எடிட்டர் ஸார்! உங்கள் அபிப்பிராயம் என்ன ஸார்? ஒரு வேளை இக்கட்டுரை 'குப்பைத் தொட்டியிலுள்ளவைகளுக் குத் தலைமை வகிக்கலாம்' என்பது உங்கள் அநுபவ அபிப்பிராயமாயிருக்குமா?

# இதோ வெளிவந்து விட்டது!

## ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!!

முன்பு பார்த்த படமல்ல! முற்றிலும் புதிது!!

மிஸ். சி. என். நீலாவதி,
வி. எஸ். செல்வரத்தினம் நடித்த

# -: நளாயினி :-

(மகத்தான புராண புண்ணிய சரிதை.)

டம் வேண்டுவோர் எழுதுக :—
ரியண்டல் சௌன்ட் பிக்சர்ஸ், லிமிடெட், திருப்பூர்.

# நரியின் தந்திரம்

—:(0):—

(அம்புலுபாய்.)

வெய்யில் மிகவும் கடுமையாக காய்ந்து கொண்டிருந்தது. ஒரு காட்டிலே ஒரு எலி நன்ருக தின்று விட்டு சந்தோஷமாக குதித்து கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு பூனை மிகுந்த பசியுடன் ஆகாரத்திற்காக அலைந்து கொண்டு வரும்போது இந்த எலியைப் பார்த்து சந்தோஷத்துடன் பிடிக்க அதன் மேல் பாய எத்தனித்தது.

உடனே எலி பூனையைப் பார்த்து (மரியாதையாக)—நமஸ்காரம் அண்ணு! நீங்கள் என்னை பிடித்து தின்பதைப் பற்றி எனக்கொரு கவலை யில்லை. ஆனல் எனக்கு வழ்ட்டு கிழ உறவினர்கள் இருக்கிருர்கள். அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு என்னிடம்—,

பூனை:—உறவினராவது, காப்பாற்றுவதாவது. அதெல்லாம் முடியாது. புறப்படு சீக்கிரம் என்னில்லத்திற்கு. இல்லாவிடில்—,

எலி:—மகாராஜ்! உங்களை நான் சரண் அடைகிறேன். அப்புறம் உங்களிஷ்டம். சரண் அடைந்தவர்களைக் கொல்லுவது நீதி யாகாது.

பூனை:—எனக்கோ இப்பொழுது பசி காதடைக்கிறது. அதற்கு ஏதாவது ஆகாரம் கொண்டு வந்தால் விட்டு விடுகிறேன்.

எலி:—நான் சென்று ஆகாரம் சம்பாதித்து வருகிறேன். இப்பொழுது நான் சில பழங்கள் தருகிறேன். அதைத் தின்று இளைப்பாறுங்கள். சாயந்திரம் ஆறுமணிக்குள் கொண்டு வராவிட்டால் என்னைத் தின்னலாம்.

பூனை படுத்து கொண்டு தூங்க ஆரம்பித்தது. எலி மிகவும் விசனத்துடன் என்ன செய்வது என தெரியாமல் விழித்




துக் கொண்டு இருந்தது. அதற்கு ஏக கவலை—அப்பொழுது அது ஒரு மரத்தை அண்ணாந்து பார்த்தபடியே, "என்ன பண்ணுவது" என்று கேட்டது. அதற்கு அந்த மரம், "எனது காய்களைப் பறிக்க ஒரு பக்ஷி வரும். அதைக்கேள்" என்றது. அந்த பக்ஷியும் வந்தது. எலி அதைப் பார்த்து, "பக்ஷியாரே! என்னைக் கொல்லுவதாக பூனை சொல்லி யிருக்கிறது. ஏதாவது ஆகாரம் கொடுத்து ரக்ஷிக்க வேண்டும்" என்று இறைஞ்சிற்று.

அதற்கு பக்ஷி, "என் [illegible] எலியே! உன்னைக் காப்பாற்று[illegible]

என்ன வேலை. அப்படி உதவி செய்ய என்னால் முடியாததைப் பற்றி தான் எனக்கு வருத்தம்."

எலி:—பிறகு நான் என்ன செய்வது?

பக்ஷி:—அதற்கு எனது தோழன் காக்கையைக் கேட்டு பூர்த்தி செய்து கொள். நான் உன்னுடன் வருகிறேன்.

பிறகு அவை யிரண்டும் பிரயாணம் செய்ய ஆரம்பித்தது. வெகு தூரத்திற்கு அப்பால் காக்கை இவைகளைச் சந்தித்தது. எலி (மிகவும் விசனத்துடன்,) "என்ன காக்கையாரே! என்னைச் சாயந்திரத்திற்குள் ஏதாவது ஆகாரம் கொண்டு வாரா விட்டால் பூனை கொல்வதாக சொல்லி யிருக்கிறது. அதற்கு என்ன செய்வது." என்றது. உடனே காக்கை என் தோழனை மானைக் கேட்டால் தெரியவரும் என்றும் தானும் பின் தொடர்வதாகவும் கூறிற்று.

பிறகு மூன்றும் மானைத் தேட சென்றன. மான் அப்பொழுது தான் தன் மாமனர் அகத்திற்கு செல்ல பிரயாணப்பட்டு கொண்டு இருந்தது. அப்பொழுது இவைகள் அதன் இல்லத்திற்கு சென்று "என்னை இன்று பகல் பொழுதிற்குள் ஏதாவது ஆகாரம் கொண்டு வாராவிட்டால் பூனை கொல்வதாக சொல்லி யிருக்கிறது. அதற்குள் ஏதாவது வழி சொல்" எனக் கேட்டது. அதற்கு மான், "நான் இப்பொழுது என் மாமனுகிய காடி வீட்டிற்கு செல்லப் போகிறேன். நீங்கள் என்னைத் தொடர்ந்து வந்தால் அவர் உனக்கு வேண்டியதை கொடுப்பார். எப்பொருளானாலும் கொடுக்கும் வல்லமை உடையவர். ஆனல் அவர் வீட்டிற்கு ஏதாவது காம் எடுத்துக் கொண்டு போக வேண்டும். இல்லா விட்டால் அவருக்கு கோபம் வரும்" என்றது. எல்லாம் சேர்ந்து யோசனை செய்ய கடைசியில் சில முயல்களைக் கொன்று ஆகாரம் செய்து எடுத்து கொண்டு ஜட்கா வண்டியில் புறப்பட்டன.

காடியார் அப்பொழுது தன் சிநேகிதன் நரியார் வரவை எதிர்பார்த்து கொண்டிருந்தது. அப்பொழுது இவைகள் சென்று வட்டமாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பேசின. தன் மருமகனுகிய மானைப்பார்த்து க்ஷேமம் விசாரித்தது. உடனே மான் தான் கொண்டு வந்திருக்கும் ஆகாரத்தை வைக்கும் பொழுது நரியும் வந்து சேர்ந்தது. எல்லோரும் அதற்கு மரியாதை செய்தார்கள். பிறகு காடியும் நரியும் ஆகாரத்தை தின்றன. எஞ்சியதை பாக்கி மிருகங்களுக்கு கொடுத்து வந்த காரியத்தை வினவிற்று.

எலி, "மாமா! இன்று இரவுக்குள் ஏதாவது ஆகாரம் கொண்டு வாராவிட்டால் பூனை கொல்வதாக சொல்லி யிருக்கிறது. அதற்கு ஏதாவது வழி சொல்லி என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று காடியின் காலை பிடித்து கொண்டது.

"நான் என்ன செய்ய முடியும். என்னை கூப்பிட்டால் போகவேண்டிய இடத்திற்கு வருகிறேன். வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனல் நமது சகோதரர் நரியைக் கேட்டால் வழி சொல்வார்" என்றது காடி.

அப்பொழுது நரி (மனதிற்குள்) முன்னெரு சமயம் அந்த பூனை என்னை ஏதாவது உபாயத்தால் கொல்வதாக சொல்லிற்றே! இப்பொழுது அதைக் கொல்ல வழி யேற்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டது. வெளிப்படையாக, "எலியே! மகா மிருகங்களே! இப்பொழுது நான் ஒரு இடத்திற்கு செல்லப் போகிறேன். அவ்விடத்திற்கு நீங்கள் வந்தால் அப் பூனைக்கு ஆகாரம் தேடித் தருகிறேன்" என்றது. பிறகு எல்லாம் மோட்டாரில் ஏறிக்கொண்டு ஒரு அழகான பங்களாவிற்கு சென்றன. நரி கதவை தட்டவே ஒரு குனியக்காரி வெளியே வந்தாள். அம் மாதுடன் நரி இரகசியமாக பேசிவிட்டு வெளியே வந்து சேர்ந்து கொண்டது.

சற்று நேரத்திற்கு பிறகு எல்லாம் தத்தம் இடங்களுக்கு சென்று விட்டன.

எல்லா மிருகங்களும் மோட்டாரில் ஏறிக்கொண்டு............

சாயந்திரம் மூன்றுமணிக்கு நரி சுவாமி ஒரு வெள்ளி கிண்ணத்தில் மிகவும் ருசியுள்ள ஐஸ்கிரீமை காடியிடம் கொடுக்க அது மானிடம் கொடுக்க அது காக்கையிடமும் பக்ஷியிடமும் மாயிடமும் கடைசியில் எலியிடமும் கொடுத்தது. எலி அவசரமாக சென்று அதைப் பூனையிடம் கொடுத்தது. "இதில் நல்ல ஆகாரம் இருக்கிறது எடுத்து புசியுங்கள். இனிமேல் என்னை கொல்ல மாட்டீர்களே" என்றது எலி.

"மாட்டேன்" என்றது பூனை.

பசிக் கொடுமையால் பூனை ஆகாரத்தை புசித்தது. அது ஜில்லென்று இருந்தமையால் எல்லாவற்றையும் தின்று பசியாற்றிற்று. சற்று நேரத்தில் எல்லா மிருகங்களும் வந்து கூடிற்று. நரி மட்டும் வரவில்லை. பூனை மகா வேதனைப் பட்டு இறந்தது. பக்ஷி பூனையைக் கொத்த ஆரம்பித்தது. பிறகு கூட்டம் கலைந்தது. 'விஷம் கலந்த ஆகாரத்தை கொடுத்து பூனையைத் தான் கொன்றதாக' எலி எல்லா மிருகத்தினிடமும் பெருமை யடித்து கொள்ளுகிறது.


# காதலனா? காதகனா?

(நவரசந் ததும்பும் நவீனம்.)

'கண்டதுங் காதல்!' 'கேட்டதுங் காதல்!' என்றெல்லாம் மதிமயங்கிக் கெட்டலையும் வாலிபர்களுக்கு இவ்வற்புத மிகுந்த கற்பிதக் கதை தகுந்தவாறு புத்தி புகட்டி, உண்மைக்காதல் இதுவென உணர்த்துகிறது. கலாசாலை மாணவ மாணவிகளின் ஆடம்பர வாழ்க்கையையும் விபரீதப் போக்கையும் அதனால் அவர்கள் அடையும் சீர்கேட்டையும் இந்நூல் ஆசிரியர் அப்படியே தம் இனிய எளிய நடையால் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இவ்வருமையான நாவல் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய தவசியம். சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

இதன் விலை அணா 10 தான்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# மகாதேவனின் கிராம விஜயம்

—(o)—

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் 'பி-ஏ' ஸீனியர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களுள், கந்தசாமி முதலியாரின் ஏக புத்திரனாகிய மகாதேவன் ஒருவன். அவன் பிறந்ததும் வளர்ந்ததும் சென்னைமா நகரத்திலேயே. அவனது பந்துக்களுள் பெரும் பான்மையோரும் நகரவாசிகளாகவே இருந்ததால், கிராமாந்திரங்களுக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் அவனுக்கு வாய்க்காமலே போய்விட்டன. அவன் மாகாணத்தின் தலைநகரமாகிய சென்னைமா நகரிலேயே பிறந்து வளர்ந்து வசிப்பவனாக இருந்தும், அந்நகரின் ஜன-நெருக்கமும் பலவகைப்பட்ட ஆரவாரங்களும் அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அந்நகரத்தை அவன் 'பூலோக நரக'மாகவே மதித்தான். காலேஜ் பரீட்சைகள் யாவும் முடிந்த பின்னர், அவனுக்குக் கிடைத்த விடுமுறை நாட்களை எவ்விடத்தில் கழிப்பதென்பது குறித்துத் தீவிரமாக ஆலோசிக்கலானான். ஏதேனும் ஒரு கிராமத்திற்குச் சென்று விடுமுறைக் காலத்தைக் கழிக்கத் தீர்மானித்த அவன், தன்னுடன் ஒரு பரிசாரகனைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டு, 'தாமரைப் பாடி' எனும் அழகிய பெயருடையதொரு கிராமத்திற்கு விஜயம் செய்தான்.

அந்த கிராமத்தின் அழகிய திருநாமம், மகாதேவனின் மனத்தைப் பெரிதும் கொள்ளை கொண்டது; அதனாலேயே, அவனது நண்பர்கள் அவனை எவ்வளவோ வற்புறுத்திக் கூப்பிட்டுப்பார்த்தும், அவன் அவர்களுடன் உதக மண்டலத்திற்கோ குற்றாலத்திற்கோ கோடைக்கானலுக்கோ செல்ல மனங்கொள்ளாமல், தான் 'காம்ப்' போடுவதற்கு உரிய இடமாகத் தாமரைப்பாடியையே தேர்ந்தெடுத்தான். ஊர் பெயர் 'தாமரைப்பாடி'யே யொழிய அங்கு ஒரு தாமரை படர்ந்த குளங்கூட கிடையாது. மகாதேவன் தாமரைப்பாடிக்கு விஜயம் செய்த காலம் ஆனிமாதமாதலின், அவ்வூரிலுள்ள நிலங்களில் எவ்வித பயிரும் சாகுபடி செய்யப்படாமல் எங்கும் ஒரே வெட்டவெளியாக—வெட்டிக் காம்பாக—இருந்தது. ஆதலின், கண்ணுக்குக் குளிர்ச்சியான பசும் பயிர்களைக் கண்டு களிக்கும் பாக்கியம் அவனுக்கு வாய்க்காமலே போய்விட்டது. அவ்வூரிலிருந்த ஆற்றுக்கேனும் சென்று இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்கலாமென்னும் எண்ணத்துடன் புறப்பட்டுச் சென்ற அவன், கோடை வெய்யலின் கொடுமையால் வறண்டு கிடந்த மணலையே கண்டு ஏமாந்து நிற்க நேர்ந்தது. அந்த ஊரில் எங்கேனும் நந்தவனம் இருந்தால் அங்கு சென்றேனும் சற்று உல்லாஸமாகப் பொழுது போக்கலாமென்று எண்ணிய அவன் மற்றவர்களை விசாரித்ததில், புளியந் தோப்பையும் வாழைத் தோட்டத்தையுந் தவிர வேறு எவ்வித தோட்டங்களும் அவ்வூரில் கிடையாதென்பதை அறிந்தான். அடர்ந்து வளர்ந்து செக்கச் செவேலென்று சிவந்த பழங்களைத் தாங்கிக் கொண்டிருந்த கள்ளிப் புதர்களையும் சிவ

பெருமானுக்கு உகப்பான எருக்கம் பூக்கள் நிறைந்த செடிகளையுமே அவன் கண்டு மகிழ வேண்டியிருந்தது!

இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாமென்று மகாதேவன் கட்டிக்கொண்டிருந்த மனக்கோட்டை இடிந்துபோய் விடவே, அவன் தனது விடுதிக்குத் திரும்பினான். இடைவழியில் ஒரு கோயிலைக் கண்ட அவன், அக் கோயிலிலுள்ள தெய்வத்தைத் தரிசித்து வருவதற்காக உள்ளே சென்றான். அங்கே அவன் கண்ட காட்சி



அவனைப் பெரிதும் திடுக்கிடச் செய்தது. கோயிலுக்குள் வீற்றிருந்த விநாயக மூர்த்தியின் எதிரிலே ஏழெட்டு ஆசாமிகள் உட்கார்ந்துகொண்டு மிகுந்த உற்சாகத்துடன் சீட்டாடிக் கொண்டிருந்தனர். சீட்டாட்டப் பித்தர்கள் சென்னை முதலிய நகரங்களில் மட்டுந்தானிருப்பார்களென்று எண்ணிக் கொண்டிருந்த மகாதேவனுக்கு, 'சீட்டாட்டக் காலட்சேப பக்தர்கள்' கிராமங்களிலும் இருப்பதும்; அதிலும் அவர்கள் தங்களது திருவிளையாடல்களை பக்தர்கள் வந்து வணங்குவதற்கு உரிய இடமாகிய கோயிலுக் குள்ளேயே நடத்திக் கொண்டிருப்பதும் பெரு வியப்பூட்டின.

அதை விட்டுப் புறப்பட்ட மகாதேவன், தனது விடுதியை அடைந்து சாப்பிட்டுவிட்டு தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்தான். அப்போது, அத் தெருவிலிருந்த கவுண்டர்களுக்குள் ஏதோ ஒரு அற்பக் காரணத்தை முன்னிட்டு சண்டை மூண்டுவிடவே, இருதரப்பாரும் வாயில் வந்தவாறு மிக்க ஆபாசமான வசைமொழிகளைத் தாராளமாக வழங்கலாயினர். அம்மொழிகள், மகாதேவனது செவிகளில் 'வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்தது'போல் பாய்வன ஆயின. நகரங்களில் நவீன நாகரிகப்பேய் எவ்வளவுதான் தலைவிரித் தாடினும், நடுத்தெருவில் நின்றுகொண்டு ஆபாசமான வசைமொழிகளைக் கூறி வாய்ச் சண்டைபோடும் காட்சியைப் பார்ப்பது மிக அரிதல்லவா? அப்படி தப்பித்தவறி ஏதேனும் சண்டை மூண்டுவிட்டால், அடக்குவதற்காக 'செந்தலைப் புலிக'ளாகிய போலீஸ் வீரர்கள் நகரங்களில் நியமிக்கப் பட்டிருக்கிறார்களல்லவா? மூண்ட சண்டையை அடக்குவதற்கோ, அல்லது கடுகை மலையாகப் பெருக்கிக் கற்பனா—சக்தியால் உண்மையில் நடந்த சம்பவத்திற்கு கண்—மூக்கு—காது முதலியவை வைத்து 'சதுர்ப்புஜ வீரர்க'ளாகிய வக்கீல்கள் திறமையாக வாதிப்பதற்குத் தகுந்தபடி வழக்கை ஜோடிப்பதற்கோ போலீஸ் வீரர்கள் இல்லாதபோது, தினந்தோறும் கிராமங்களில் தெருச் சண்டைகள் நடைபெறுவது சகஜந்தானே!

மறுநாள், அவ்வூரில் வசிப்பவர்களுள் சற்று கௌரவமான வாழ்க்கை நடத்துபவர்களான பிராமணர்களைப் பார்த்துப் பேசிவரலாமென்னும் நோக்கத்துடன் மகாதேவன் அவ்வூர் அக்கிரகாரத்திற்குச் சென்றான். 'பூதேவர்கள்' என்று போற்றப்படும் முதற் குலத்தினராகிய பிராமணர்கள் வசிக்கும் வீதியிலே, கழுதைகளும் நாய்களும் தாராளமாக சஞ்சரித்துக் கொண்டிருந்ததைக் கண்ட அவன் பெரிதும் வியந்தான். வீதியோரத்தில் எறியப்பட்டிருந்த எச்சிலைகளை நடுத்தெருவில் இழுத்துக் கொண்டுவந்து அவற்றில் கிடந்தவற்றை அவை தின்று கொண்டிருந்தன. ஆசாரசீலங்களில் சிறந்தவர்

ளாகக் கூறப்படும் 'பூ தேவர்கள்' வசிக்கும் திருவீதியை, அத்தகைய கோலத்தில் கண்ட மகாதேவன் மனம் பெரிதும் பதை பதைத்தது. மகாதேவன் சென்னை நகர வாசியாதலின், அவன் 'கிராப்' தலையினனாக விளங்கினான் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. எனவே, அவனைக் கண்ட அக்கிராம வாசிகளுள் எவரும் அவனைப் பொருட் படுத்தவில்லை. அதே சமயத்தில், அவ்வீதியில் 'கும்மாளம்' போட்டுக்கொண்டு ஒரு பசு ஓடிவந்தது; அதன் பின் அதைப் பிடிக்க, இடையில் ஒரு சிறு கோவணம் மட்டும் அணிந்தவனும் கன்னங் கரேலென்ற மேனி உடையவனுமாகிய ஒரு சிறுவனும் ஓடிவந்தான். அச்சிறுவனைக் கண்ட அக்கிரகார வாசிகள் மிகுந்த ஆத்திரமடைந்தவர்களாய், 'இத்துண்டு பறப்பயலுக்கு என்ன துணிச்சல்! கொஞ்சங்கூட பயமில்லாமே அக்கிரகாரத்துக்குள்ளே நுழைஞ்சுட்டானே!'-என்று கத்திக்கொண்டே தெருமுனையில் நின்று கொண்டிருந்த கவுண்டன் ஒருவனைக் கூப்பிட்டு, அச்சிறுவனைப் பிடித்து மரத்தில் கட்டச்செய்து புளிய மிலாரினால் மிக மிகக் கொடுமையாக அடிக்கச் செய்தனர். பாவம்! வற்றிய தோலும் ஒட்டிய வயிறும் மெலிந்த உடலுமுடைய அந்த ஹரிஜனச் சிறுவன் ஒரு டஜன் அடிகளைப் பெற்ற பின்பு கட்டவிழ்த்து விடப்பட்டதும், சுய உணர்ச்சியை இழந்து துவண்டு விழுந்து மூர்ச்சையடைந்தான். அந்த அக்கிரமமான கோரக்காட்சியைக் கண்ட மகாதேவன் மனம் பெரிதும் துடிதுடித்தது. பகுத்தறிவற்ற மிருக இனத்தில் நீசத்தன்மை பெற்ற கழுதைகளும் நாய்களும் தாராளமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்த அந்த அக்கிரகாரத்திலே, வெருண்டு ஓடிய பசுவைப்பிடிக்கும் நோக்கத்துடன் தான் நுழையும் வீதி எதுவென்பதையும் கவனியாமல் தன்னை மறந்து நுழைந்துவிட்ட எளிய ஹரிஜனச் சிறுவனுக்கு அக்கிரகார வாசிகள் விதித்த மிருகத்தனமான அநியாயத்தண்டனை, மகாதேவனது மனதைப் பெரிதும் புண்படுத்தியது. அதுமட்டும் ஒரு நகரமாக இருந்திருப்பின், அவன் மறுநிமிஷமே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பான்.

தாமரைப் பாடியில் போலீஸ்—ஸ்டேஷன் ஏது ?

அன்று மாலை அவன் தங்கியிருந்த வீதியில் மூன்று கவுண்டர்கள் மது—பானம் செய்து மதி மயங்கியவர்களாய், தள்ளாடித் தள்ளாடி நடந்து தரையில் விழுந்து மிகமிக ஆபாசமான கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டும் வாயில் வந்தவாறு பாடிக்கொண்டுமிருந்ததைக் காண நேரிட்டது. நகரங்களிலும் கள்ளுக்கடைகளும் கட்குடிப் பித்தர்களும் இருப்பதை மகாதேவன் அறிவானாயினும், அக்குடியர்கள் கிராமத்துக் குடியர்களைப்போல பரிகாசத்திற்கு இடமான -கேவலமான முறையில் நடந்து கொள்ளத் துணிய மாட்டார்களென்பதை நினைத்துப் பெருமூச் செறிந்தான்.

தாமரைப்பாடியில் மூன்று நாட்கள் தங்கியிருந்த மகாதேவன், நாலாவது நாளே அவ்வூரை விட்டு சென்னைமா நகருக்கே போய்ச் சேர்ந்தான். அன்று முதல், கிராமவாசத்தில் அவன் கொண்

டிருந்த மோகம், மாயமாக மறைந்து போய் விட்டது. மூடப் பழக்க வழக்கங்களும் கல்வியறிவற்ற கீழ்த்தர மக்களின் பல வகைப்பட்ட திருவிளையாடல்களும் நிரம்பிய தற்காலக் கிராம வாசத்தைக் காட்டிலும், எவ்வளவு குறைகள் இருந்தாலும் அவை வெளிக்கு எளிதில் தெரியாவாறிருந்த 'நாஸூக்'காகவும் 'கௌரவ'மாகவும் தினசரி வாழ்க்கை நடத்தப் பயிற்சி பெற்றுள்ள நாகரிகர்கள் நிறைந்துள்ள நகரவாசம் எவ்வளவோ மேலானதென்னும் முடிவுக்கே, மகாதேவன் வர நேர்ந்தது. பலவகைப்பட்ட குறைகள் மிகுந்து சீர்குலைந்து விளங்கும் தற்காலக் கிராமங்களை, குற்றமற்ற தூய அன்புத்தேவி தாண்டவம் புரிந்து கொண்டிருந்த பழங்காலத்திய கிராமங்களைப்போல் மாற்றக் கூடிய மகத்தான சக்தி, தற்காலத்தில் 'கிராம புனருத்தாரண சேவை' செய்யப் புறப்பட்டிருப்பவர்களுக்கு உண்டோ? அவர்களுக்கு அத்தகைய சக்தியையும் முழு வெற்றியையும் கூடிய விரைவில் அளித்தருள, செந்தமிழ்த்தாயே திருவுள்ளம் இரங்கி யருளவேண்டும்.

ஆறவது இதழ் செப்டம்பர் 4ந் தேதி வெளியாகிவிட்டது. விலை அணா 1.

"வஸந்தகாலம்" ஏஜண்டுகளுக்கு 100-க்கு 50 கமிஷன்.
அணா ஸ்டாம்புடன் உடனே எழுதுக.

கதைகள், கட்டுரைகள் தேவை! மானேஜர், "வஸந்தகாலம்," மதுரை (S. I.)

(செ. 70.) கூட்டல் போட்டி
ரொக்கம் ரூ. 1000.
சரியான விடைக்கு ரூ. 900
அதிக விடைக்கு ரூ. 100

●
●
●
6

● இந்த இடத்தில், 0 தவிர, ஒரே ஒரு எண் வீதம் (வந்த எண் வரலாம்) பூர்த்தி செய்து கூட்டினால் விடை 6 வரவேண்டும்.

(செ. 71.) விடுபட்ட எழுத்து
ரொக்கம் ரூ. 2000.
சரியான விடைக்கு ரூ. 1750
அதிக விடைக்கு ரூ. 250
இரண்டே 2 வார்த்தைகளே!

| | | |
|---|---|---|
| 1 | க — | ஓர் மரம் |
| 2 | — ரி | வழி |

2 வார்த்தைகளைப் பூர்த்தி செய்க.

(செ. 72.) கழித்தல் போட்டி
ரொக்கம் ரூ. 1000.
சரியான விடைக்கு ரூ. 900
அதிக விடைக்கு ரூ. 100

5 ● ●
2 6 4
3 ● ●

● இந்த இடத்தில் ஒரு எண் வீதம் 0 முதல் 9 வரை, (வந்த எண் வரலாம்.) போட்டுக் கழித்தால் விடை சரியாய் வரவேண்டும்.

☞ 3 போட்டிக்கும் முடிவு அக்டோபர் 3ந்தேதி. ஒவ்வொரு போட்டியிலும் பிரவேசக் கட்டணம் விடை 1-க்கு அணா 4 தான். அணா 12 வரை ஓரணா, காலணா ஸ்டாம்புகளாக மட்டும் அனுப்புக; அதற்குமேல் M.O., அல்லது போஸ்டல் ஆர்டர். மானேஜர் தீர்ப்பே முடிவானது. சிலோன் ஸ்டாம்புகள் கூடா. 3போட்டி விடைகளைத் தனிக் காகிதத்தில் எழுதி ஒன்றாய் அனுப்பலாம். 1 அணா அதிகம் அனுப்புவோருக்கு, முடிவு விவரம் வெளியாகிற அக்டோபர் 15ந்தேதி வஸந்தகாலம் இதழ் அனுப்பப்படும். பரிசுகளும் 15ந்தேதியே அளிக்கப்படும்.

மானேஜர், 'முருகன் போட்டி' நிலையம், காண்பாளையம், மதுரை (S. I.)

# சம்சார நௌகா

—:(0):—

("இரஸிகன்.")

"பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை யுயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலுங்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலுங்
கண்கள் நின்றுஇமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந்து ஓங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே."

"இதென்ன! இரஸிகனே! விமர்சனம் எழுத வந்த இடத்து—அதிலும், ஒரு சிறந்த கன்னட படத்துக்கு விமர்சனம் எழுதத் தொடங்கிய இடத்து—பாட்டு—ஒரு தமிழ்ப்பாட்டு—செந்தமிழ்ப் பாடல்—பாட ஆரம்பித்து விட்டாயே!"- சற்று பொறுங்கள் ஸ்வாமி! பொறுங்கள். இப் பாட்டை நான் பாடவில்லை—இராமலிங்க சுவாமிகள் பாடியது என்று எங்களுக்குத் தெரியும்—அதைச் சொல்ல வரவில்லை. இப் பாட்டு, இந்த "சம்சார நௌகா" கன்னட படம் வெள்ளித்திரையில் காட்டத் தொடங்குவதற்கு முன்பாக மிக இனிமையாகப் பாடப்படுகிறது. அதைத்தான் இங்கு குறிப்பிட வந்தேன்; என்னைப்போல நீங்களும் ரஸிப்பீர்களென்று. அதற்குள் அவசரப்பட்டு என்னென்னமோ கேள்வி யெல்லாங் கேட்கத் தொடங்கி என்னைக் கிடுகிடாய்க்கச் செய்து விட்டீர்களே!

* * *

"சம்சார நௌகா" என்னும் பெயருடைய சமூகக் கதை மூன்று நான்கு மாதங்களுக்கு முன், மைசூர் நாடக கலா மண்டலியாரால், சென்னை "சவுந்தரிய மஹாலி'ல் அடிக்கடி நடிக்கப்பட்டு மக்கள் மனதைக் கவர்ந்து வந்ததை நான் ஏற்கனவே இப் பகுதியில் குறிப்பிட்டிருக்கிறேன். அந் நாடக கலா மண்டலியில் இருந்த முக்கிய நடிகர்களே, தேவி பிலிம்ஸார் தயாரித்திருக்கும் இப் பேசும் படத்திலும் நடித்திருக்கின்றனர். "சம்சார நௌகா" என்றால், தமிழில் "சமுசார கப்பல்" என்று பொருளாகும். சாதாரணமாக, மனித வாழ்க்கையில் நிகழும் சுகதுக்கங்

களைப் பிரதிபலித்துக் காட்ட, "சம்சார நௌகா"வை யெழுதிய ஸ்ரீமான் சிம்மம் முயன்றிருக்கிறார். அம் முயற்சியில் அவர் ஒருவாறு வெற்றி பெற்றிருக்கிறார் என்று கூறின் மிகையாகாது. நாடகமாடுவதற்காக இயற்றப்பட்ட இக்கதை சினிமாவுக் கேற்ப, சிற்சில இடங்களில் மாற்றி யமைக்கப்பட்டிருக்கிறது.

கதை யமைப்பு

எச். ராகவேந்திரராவ் என்பவர் ஒரு ஜமீந்தார். அவருக்கு சுந்தர், மாது ஆகிய இருவர் பேரப்பிள்ளைகள். சுந்தர் நன்கு படித்தவன்; அறிவாளி. மாது மக்கு; அத்துடன் அரைப் பைத்தியங்கூட. ஜமீந்தார் பூஜாரி ஆசார் மகள் சுசீலாவை மூத்தபேரன் சுந்தருக்கு விவாகஞ் செய்து வைக்க விரும்புகிறார். சுசீலாவும் சுந்தரைக் காதலிக்கிறாள். ஆனால் சுந்தர் பாரிஸ்டர் புதல்வி சாராளாவைக் காதலித்துக் கலியாணஞ் செய்துகொள்ள முயல்கிறான். இதை யறிந்த ஜமீந்தார் அடங்காக் கோபங்கொண்டு அவனுக்குத் தம் சொத்திலிருந்து ஒரு செப்புக்காசுந் தரப்போவதில்லை யெனக் கூறி அவனை புறக்கணித்து விடுகிறார். சுந்தர் இதற்கெல்லாம் மனங் கலங்காது தான் காதலித்த சாள்ராவையே மணந்து கொள்ளுகிறான். அதே சமயத்தில் ஜமீந்தார் இளைய பேரன் அசடு மாதுவுக்கு ஆசார் குமாரி சுசீலாவை அவள் விருப்பத்துக்கு மாறாகக் கலியாணஞ் செய்துவைக்கிறார். ஏற்கனவே, ஜமீந்தார் மாளிகையில் ஆதிக்கம் வகித்துவந்த கள்ளபூஜாரி ஆசார் இச்சம்பந்தம் ஏற்படவும், அதிக ஆதிக்கஞ் செலுத்தி ஜமீந்தார் சொத்தைக் கொள்ளை கொள்ள சமயம் பார்த்து வருகிறார். விவாகமானதும், மாதுவின் அட்டகாசமும் அதிகமாகிறது. அவனுக்கு இளமையிலேயே கன்யா குமார தீக்ஷித் என்னும் துஷ்டனுடைய சகவாசம் ஏற்பட்டு, பல வகைகளிலுங் கெட்ட நடத்தைகளை மேற்கொண்டுவருகிறான். "டிக்கி" என மாதுவால் செல்லமாக அழைக்கப்படும் தீக்ஷித் சுசீலாமீது கண்போட்டு அவளையும், ஜமீந்தார் சொத்தையும் ஒருங்கே கவர முயன்று வருகிறான். இவனது இம்முயற்சிகளுக்கெல்லாம் அசட்டு மாதுவை இவன் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளுகிறான். சுந்தர்—சாராளா காதல் வாழ்க்கை சில காலம் சுகமாக நடைபெறுகிறது. தொட்டம்மா என்னும் விதவைக்கிழவி (சுந்தர், மாது ஆகியவர்களுக்குப் பெரியம்மா) ஜமீந்தாரிடம் வருகிறாள். அவள் சாராளாவின் நாகரிக நடையுடை பாவனைகளைக் கண்டு மருள்வதும், அவளைப் படுத்துங் கொடுமையுஞ் சொல்லத்தரமன்று. இவள் வீட்டில் அடியெடுத்து வைத்ததுதான் சுந்தருக்குச் சனிதிசை யாரம்பிக்கிறது. அவன் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப்படுகிறான். ஏராளமான கடன் வேறு ஏற்படுகிறது. இந்நிலைமையில் ஒரு புதல்வன் இவர்களுக்குப் பிறக்கிறான். இக்காதல் தம்பதிகளோடு அக்குழந்தையும் தரித்திரத்தின் ருசியைச் சுவைத்துப் பார்க்கிறது. கடன்காரன் பத்ரண்ணாவின் கொடுமை தாங்கமாட்டாமல், யாரிடமாவது பொருளுதவி பெற்று அக்கடனைத் தீர்க்க எண்ணி சுந்தர் வீட்டை விட்டுப் புறப்படுகிறான். போகுமிடமெல்லாம் ஏமாற்றம். சுந்தரின் தரித்திர கோலத்தைக் கண்டு, நண்பன், மாமனார், பாட்டனார் யாவரும் வெறுத்து ஒதுக்குகிறார்கள். தன் கணவனுக் கேற்பட்ட கஷ்டத்தைத் தானும் பகிர்ந்துகொண்டு வந்த சாராளா தந்தையால் கொணரப்பட்டு தகப்பனார் வீட்டில் இருக்கும்போது, தன் கணவன் வரவை யறிந்து மகிழ்ச்சியோடு வரவேற்க முயல்கிறாள். இதற்குள் பாரிஸ்டர், மகளை யுள்ளே தள்ளிவிட்டு, மருமகனுக்கு 1000-ரூபாய் செக் எழுதிக் கொடுத்து எங்கேயாகிலும் வெளியூருக்குப் போய் தலை மறைவாய் வாழும்படி கூறுகிறார். சுந்தர் அவரது கேவல மனப்பான்மையைக் கண்டு உள்ளங் கொதிக்கிறான். இருவருக்குமிடையே சச்சரவேற்படுகிறது. பாரிஸ்டர் ஆட்களைவிட்டு சுந்தரை வெளியே தள்ளுகிறார். இச்சமயத்தில் பாரிஸ்டர் தம்பி சுந்தரைத் தன்னிருப்பிடத்துக்கு எடுத்துச் சென்று சிகிச்சை செய்து காப்பாற்றுகிறான்.

கண்ணாடிமுன் நிற்கும் கட்டழகி விதவை கிரிஜா

இச்சமயத்தில், ஜமீந்தார் நோய்வாய்ப்பட்டு மாண படுக்கையில் இருக்கிறார். அவருக்குச் சுந்தர் நினைவேற்பட்டு "சுந்தர்! சுந்தர்!" என்று வாய் பிதற்றுகிறார். ஆசாரும், மாதுவும், டிக்கியும் ஜமீந்தார் இறக்கு முன்பே, இரும்புப் பெட்டியைத் திறந்து பணத்தைக் கொள்ளை யிடுகின்றனர். ஜமீந்தார் இறந்ததும், ஆசாருக்கு ஆதிக்க மேற்படுவதைக் கண்டு டிக்கியும் மாதுவும், அவரைத் தந்திரத்தால் கொன்று சாம்பலாக்கி விடுகின்றனர். சுசீலா தன் துன்மார்க்க இச்சைக்கு இடங்கொடுக்காமையால், அந்த ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள டிக்கி மாதுவைக் கொண்டு துப்

பாக்கியால் சுடச்செய்கிறான். இச்சமயத்தில் சுந்தர் சுசீலாவோடு பேசிவிட்டுச் சென்றமையால், அவன் சந்தேகத்தின் மீது கைது செய்யப்படுகிறான். இவர்கள் செய்கையைக் கிரிஜா அறிந்து விட்டதால், டிக்கி இவளைக் கட்டிப்போட்டு விடுகிறான், பாரிஸ்டர் தம்பி இதை யறிந்து அவளை விடுவித்து அவள் வாயிலாக உண்மை யறிந்து கோர்ட்டில் நிரூபிக்கிறான். கடைசியாக, சுந்தர் விடுதலை யடைகிறான். டிக்கியும் மாதுவும் சிறைவாசத் தண்டனை யநுபவிக்கின்றனர்.

*　　　*　　　*

நடிப்பு.

இப் படத்தில், கதாநாயகன் சுந்தராக ஸ்ரீ பி. ஆர். பந்துலு வேடம் பூண்டு தமது நடிப்புத் திறமையை வெளிப்படுத்துகிறார். ஸ்ரீ எம். மாதவராவ் 'டிக்கி'யாகவும், ஸ்ரீ எம். எஸ். மாதவராவ் அசட்டு மாதுவாகவும் நடித்திருக்கின்றனர். இவர்கள் தாங்கள் பூண்டிருக்கும் பாத்திரங்களின் தன்மையை யுணர்ந்து சமயோசிதமாக நடித்திருப்பதால், இன்ன இடத்தில் தான் இவர்கள் உயர்வாக நடித்திருக்கிறார்கள்; இன்ன இடத்தில் நடிப்பு சுகமில்லை என்று கூறுவதற்கு இடமில்லை. ஆனால் ஒன்று மட்டும் நான் இங்கு கூறமுடியும். நாடக மேடையில் இவர்களது சிறந்த நடிப்புத் திறமையைக் கண்டு ரஸித்த அளவு, இப் படத்தில் ரஸிக்க முடியவில்லை. அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. நாடகத்தில் நடிகர்கள் சுதந்தரமாகத் தங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்தலாம். சினிமாவிலோ என்றால், சில கட்டுத் திட்டங்களிருக்கின்றன. அவற்றிற் குட்பட்டே நடிகர்கள் தங்கள் பாவத்தை வெளிப்படுத்தவேண்டும். டைரக்டர் மிகவும் திறமை வாய்ந்தவரா யிருந்தால், இவ் வேற்றுமை அல்லது குறை தோன்றாதபடி செய்திருக்கலாம். சுந்தரின் தரித்திர கோலத்தில் பி. ஆர். பந்துலு நடிப்பின் சிகரத்திலிருந்து நடிக்கிறா ரென்றே கூற வேண்டும். டிக்கி கள்ள பூஜாரியைச் சூழ்ச்சியால் கொல்ல முயலும் போது எம். மாதவராவ் பாரிப் பெண் வேடத்தில் தோன்றி நடிப்பதும் பாடுவதும் வெகு நன்றா யிருக்கிறது. அசட்டு மாது கோர்ட்டில் சாட்சியங் கூறும் போதும், மற்றும் இரண்டொரு இடங்களிலும் பேசி நடிக்கும் விதத்தைக் கவனித்தால் எம். எஸ். மாதவராவ் மிகை நடிப்பு என்னுங் குற்றத்துக்கு ஆளாகிறார்.

கள்ளபூஜாரி வேடத்துக்கு ஸ்ரீ. ஜி. டி. பாலகிருஷ்ண ராவ் மிகவும் பொருத்தமானவர். அவரது ஹாஸ்ய நடிப்பு பார்ப்பவர்களைக் குதூகலிக்கச் செய்கிறது. தொட்டம்மா என்னும் விதவைக் கிழவி வேடத்தை ஸ்ரீ எச். என். ராமகிருஷ்ண பட் பூண்டு நடிக்கிறார். அவர் பலே கைகாரர். 'பிரேமலீலா' போன்ற நாடகங்களில் யௌவன மங்கையாக வேடம் பூண்டு தான், யாவரையும் மயக்கினா ரென்றால், தத்ரூபம் பல்போன மொட்டைக் கிழவியாகவுமா வந்து மயக்க வேண்டும்! ஒரு சிறந்த நடிகனுக்கு நடிக்கும் விஷயத்தில் எது தான் இயலாது? ஆனால், இப் படத்தில் வைதிகமாகத் தொட்டம்மா ஸ்நானஞ் செய்யு மிடத்தில் தான் இவரது குட்டு வெளிப்பட்டு விடுகிறது.

கதாநாயகி சாரளாவாக ஸ்ரீமதி ராஜம்மாவும், சுசீலாவாக ஸ்ரீமதி எஸ். கே. பத்மாவும், பால்ய விதவை கிரிஜாவாக ஸ்ரீமதி வி. சரோஜம்மாவும், நடிக்கின்றனர். ஸ்ரீமதி ராஜம்மாவும், ஸ்ரீமதி பத்மாவும் சுமாராக நடிக்கிறார்கள். இன்னும் இவர்களுக்குப் போதிய பயிற்சி யளித்திருந்தால், இவர்கள் நன்றாக நடித்திருக்கக் கூடும்.

ஜமீந்தார், வேலையாள், பாரிஸ்டர், பத்ரண்ணா முதலிய வேடம்பூண்டு நடித்தவர்களும் அவ்வளவாகக் குற்றஞ் சொல்வதற் கிடமின்றியே நடித்திருக்கின்றனர்.

பாட்டும், சம்பாஷணையும்.

நடிப்பைவிட பாட்டுதான் இப்படத்தில் முக்கியத்துவம் வகிக்கிறது. சுமார் 17 பாடல்களே பாடப்படுகின்றன. ஸ்ரீ தண்டபாணி தேசிகர் பாடியிருக்கும் இரு பாடல்கள் கேட்டு இன்புறத் தக்கவை, ஸ்ரீமதி ராஜம்மா, ஸ்ரீ பாலகிருஷ்ண ராவ்

ஆந்திர நடிகமணி ஸ்ரீமதி. ஸ்ரீரஞ்சனி.

முதலியவர்கள் பாடுகிறார்களாயினும், ஸ்ரீமதி பத்மா இனிய சாரீரத்தோடு பாடும் பாடல்களே கர்ணாமிர்தமா யிருக்கின்றன.

கதாசிரியர் ஸ்ரீமான் சிம்மமே இதற்குரிய சம்பாஷணையை எழுதி யிருப்பதால் உணர்ச்சி ததும்பக்கூடியதா யமைந்திருப்பதில் ஆச்சரியமில்லை. கன்னட பாஷையை அரைகுறையாக அர்த்தஞ் செய்து கொள்ளக் கூடிய என் போன்றாரும் உணர்ச்சி வயப்படக் கூடியதா யிருக்கிறதென்றால், அச் சம்பாஷணையின் சிறப்பைப்பற்றி நான் அதிகங் கூறவேண்டிய

தில்லை, பனகால் பார்க்கில் தன்னெதிர்ப்பட்ட சிநேகித னொருவனைக் கண்டு சுந்தர் ஆர்வத்தோடு அணுகும்போது, அவன் இவனை அறியாதவன் போலவே பாவனை செய்து கேவலமாகப் பேசிவிட்டுச்செல்லுமிடத்தில், சுந்தர் தன் விதியை நொந்துகொண்டு பேசுமிடத்திலும், பாரிஸ்டர் ஏழையாய்விட்ட மருமகன் தம்மிடம் இருந்தால் சமூகம் தம்மைக் கேவலமாகக் கருதும் என்றெண்ணி சுந்தரை உடனே தம் மாளிகையை விட்டுப் போய்விடும்படி கூறுமிடத்திலும் நடிக்கும் சம்பாஷணையின் போக்கு உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாயிருக்கிறது. ஆனால் சுந்தர் தன் பரிதாபநிலையை வெளியிட்டு கடவுளை நோக்கி முறையிடுமிடத்தில் ஆங்கில மொழியை அள்ளி வீசுவது அவ்வளவு விரும்பத் தக்கதாயில்லை. தாய் மொழியில் அந்நிலையை விவரிக்க வார்த்தைகளில்லையா? அம்மொழியில் கூறினால், கவர்ச்சியேற்படாதா? "சதி – லீலாவதி" தமிழ்ப் படத்திலும் இவ்வாறே கதாநாயகன் குடியின் தீமையைப்பற்றிக் கூறுமிடத்தில் ஆங்கிலத்தில் சொன்மாரி பொழிந்ததைக் கண்டித்திருக்கிறேன். ஆங்கிலத்திலேயே பேசவேண்டிய இடத்திலும், நவ நாகரிக நிலையைத் தெரிவிக்க ஆங்கிலச் சொற்களை ஊடே ஊடே கலந்து பேசவேண்டிய இடத்திலும் ஆங்கிலத்தை யுபயோகிப்பது அவசியமே யொழிய, இவ்வித தனி நிலையில் ஆங்கிலத்தில் பேசவேண்டிய அவசியம் சிறிதுமில்லை. சம்பாஷணை வரைபவர்கள் இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இல்லாவிடில், பிறமொழியாளரின் பரிகசிப்புக்கே இடமேற்படும். இப்படத்தில் நடிகர்கள் பெரும்பாலும் விரைந்து பேசுகின்றனர். எனவே, பார்ப்பவர்கள் சம்பாஷணையைப் பின்பற்றுவது சிறிது சிரமமாகும்.

இப்படத்தில் திரை மறைவு சங்கீதம் இனிமையாயிருக்கிறது. படப்பிடிப்பு தெளிவாக இருக்கிறது. ஒலிப்பதிவில்தான் சில குறைகள் காணப்படுகின்றன. இயற்கைக் காட்சியும், ஸெட்டிங்கும் பாதகமில்லை. டைரக்ஷன் விஷயத்தில் இன்னும் ஊக்கங்காட்டியிருந்தால், பொதுவாகப் படத் தயாரிப்பிலும், ஒலிப்பதிவிலும் காணப்படும் சிறு குற்றங்கள் தவிர்க்கப் பட்டிருக்கலாம். சுந்தருக்கும் சாராளாவுக்குமிடையே நிகழும் காதல் காட்சி இன்னும் ரம்மியமான முறையில் எடுத்திருக்கலாம்.

எனினும், "சம்சார நௌகா"வைக் கூடுமானவரை வெற்றிகரமாகத் தயாரித்த தேவி பிலிம்ஸாரைப் போற்றாமலிருக்க முடியாது.